# ஸ்ரீ ரமண சரணப் பல்லாண்டு

உ

சிவமயம்

# ஸ்ரீ ரமண சரணப் பல்லாண்டு


பாரத்வாஜி

முகவைக் கண்ண முருகனார்

இயற்றியது



ஸ்ரீ ரமண பாதானந்தரால்

வெளியிடப்பெற்றது

சுபானுஸு மார்கழிமீ

1943


உரிமை பதிவு]

[விலை ரூ. 1-0-0.

முதற் பதிப்பு-1943ஆ டிஸம்பர்மீ

The Jupiter Press, Ltd., Madras.

உ

சிவமயம்

ஸ்ரீரமண சரணப் பல்லாண்டு

# உள்ளுறை

———


| | | | |
|---|---|---|---|
| | | | பக்கம் |
| | பதிப்புரை | ... | vii |
| | முகவுரை | ... | ix |
| | சிறப்புப்பாயிரம் | ... | xv |
| | நூல் | | |
| க. | சரணத் திருவகவல் | ... | 1 |
| உ. | சரணத் திருவெண்பா | ... | 26 |
| ௩. | புனர்வசு வண்ணம் | ... | 45 |
| ச. | பிரார்த்தனை மாலை | ... | 47 |
| ரு. | திருப்பல்லாண்டு (க) | ... | 51 |
| சு. | திருப்பல்லாண்டு (உ) | ... | 54 |
| எ. | திருப்பல்லாண்டு (௩) | ... | 74 |
| அ. | வாழ்த்து | ... | 85 |
| | அனுபந்தம் | ... | 91 |
| | செய்யுள் முதற்குறிப் பகராதி | | 92 |

ஸ்ரீ ரமணஜயம்

# பதிப்புரை

---

“நமச்சிவாய வாஅழ்க நாதன்றாள் வாழ்க”, “நின்னிற் சிறந்த நின்றா ளிணையவை” என்பன தமிழ்ப் பெரியோர் கண்ட முடிபு. அப்பெரியோர் சென்ற நெறியை அடியொற்றி ஸ்ரீ ரமண பகவான் திருவடிகளில் அணியப் பெற்ற வாடா மாலையாகும்—“ஸ்ரீ ரமண சரணப் பல்லாண்டு” என்னும் இந்நூல். இந்நூலில் பாரத்வாஜி ஸ்ரீ முகவைக் கண்ணமுருகனார் அத்திருவடித் தாமரைகளிலுள்ள தேனைத் தாம் உண்டதோடு அமையாமல், அதனை உலகினர்க்கும் பங்கிட்டுக் கொடுக்கின்றார்.

திருவருளை முன்னிட்டு, “ஸ்ரீ ரமண சரணப் பல்லாண்டு” என்னும் இந்நூலை அச்சிட்டு வெளியிடும் பணியை யான் மேற்கொண்டேன். இப்பதிப்பு நன்றாக நிறைவேறும்வண்ணம் பலவகையிற் பேருதவிபுரிந்த மெய்யன்பர்களைப்பற்றிச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகின்றேன்.

இந்நூலின் கையெழுத்துப் பிரதியைப் பார்வையிட்டும் பாடல்களை வகைப்படுத்தியும் அச்சுத்தாள்களைத் திருத்தியும் உதவிய நண்பரும், தாக்ஷிணாத்திய கலாநிதி மஹாமஹோபாத்தியாய டாக்டர் உ. வே. சுவாமிநாதையரவர்களின் மாணவர் திலகமும், “கலைமகள்” ஆசிரியருமான ஸ்ரீமான் கி. வா. ஜகந்நாதையரவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன். வழக்கம்போலவே ஸ்ரீ முருகனார் நூலாகிய இதற்கும் பலவகையிலும் பேருதவிபுரிந்த ஸ்ரீமான் திருத் தணிகைமணி

ராவ்பஹதூர் வ. சு. செங்கல்வராய பிள்ளையவர்களுடைய உழைப்பையும் பேரன்பையும் யான் என்றும் மறவேன்.

இந்நூலை வெளியிடுவதற்குப் பொருளுதவி புரிந்த பெரியோர்கள், தமக்கு அணிகலமாய் விளங்கும் அடக்கத்தினால் தம் பெயரை வெளியிட விரும்பாமையின் அன்னாருக்குத் தமிழுலகின் சார்பாக என் நன்றியறிவையும் அன்பையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்நூலை மிகப் பொறுமையோடு திருத்தமாக அச்சிட்டு உதவிய சென்னை, "தி ஜூபிடர் பிரஸ், லிமிடெட்" நிர்வாகிகளுக்கு என் மனமார்ந்த நன்றி உரியதாகும்.

ஸ்ரீ முருகனுருடைய மற்ற நூல்களுக்கு ஆதரவளித்து ஊக்கியது போலவே, அன்பர்களும் தமிழறிஞர்களும் இதற்கும் அளிப்பார்களென்ற துணிவே இதனை வெளியிடும்படி என்னைத் தூண்டியது.

ரமண பாதானந்தா
15—12—43

உ

திருத்தணிகேசன் துணை

# முகவுரை

திருவண்ணாமலையில் இருவருக்கு அரியராய் நின்ற பெருமான் தமக்கு எளியராய்க் கிடைத்தருளிய பெருங் கருணையை நினைந்து,

"*வையமதில் வந்தவொரு மானிடனென் றிருந்தனையோ
உய்யுநெறி யெழுந்தருளு மொருமுதலென் றுணர்ந்திலையோ"

"பிறப்பினையு மிறப்பினையும் பெற்றவனென் றுற்றனையோ
இறப்பினையும் பிறப்பினையும் எறிந்தவனென் றறிந்திலையோ"

—என்னும் வகையில் ஸ்ரீ ரமண பகவானது உண்மை நிலையை உணர்ந்து,

†'கொண்டான் எனையென்று பாடீரே
கொடுத்தான் தனையென்று பாடீரே'—என்னும்

வகையில் தமது உள்ளங் களித்து,

‡'பொன்னை நரர்க்குக் கொடுத்துநீர் போமென்று
தன்னை யெனக்கருளும் தம்பிரான்—அன்னை யெனும்
உற்றான் அமுதமே ஒப்பான் அருண்மேனி
பெற்றான் அடியேன் பிழைபொறுப்பான்—கற்றார்
தொடுத்த தொடைக்கிசைந்த தோற்றத்தான் தன்னைக்
கொடுத்த கொடைக்குவந்த கோமான்......பயில
நரனென் றிருந்தாலும் ஞானமிலா தாரும்
பரனென் றறியப் படுவான்'—

---

* பாசவதைப் பரணி - 602, 606.
† ஷை - 720.
‡ நெஞ்சுவிடு தூது.

என முன்பு சிவப்ரகாச சுவாமிகள் தம்மை ஆட்கொண்டருளிய சிவஞான பாலைய தேசிகரைத் தொழுது வணங்கியது போன்று, குருமணியாய் நின்று தம்மை ஆட்கொண்டருளிய ஸ்ரீரமண பகவானைச் சரணடைந்து அவரது அருள் நாட்டம் பெற்று, எனக்கு 'நீயே உற்ற சரண்' என்றும், 'நீ பல்லாண்டு வாழ்க' என்றும், ஸ்ரீ கண்ண முருகனார் தமது கரைகடந்த பக்திப்பெருக்கால் ஸ்ரீரமண பகவானைத் துதித்து வாழ்த்திய புகழ் நூலாகும்-"ஸ்ரீரமண சரணப் பல்லாண்டு" எனப் பெயரிய இந்நூல். எனவே, முருகனார் முன்பு பகவானுக்கு ஸமர்ப்பித்த "ஸ்ரீரமண சந்நிதி முறை" என்னும் நூலுக்கு இந்நூல் ஒரு தொடர் நூலாமென்க. இந்நூலில் எண் பகுதிகள் உள்ளன. அவ்வெண் பகுதிகளும் எண் பகுதிகளாமென்க. அப் பகுதிகளுள்—

முதற்பகுதி—சரணத் திருவகவல் - அநுபந்தத்துடன் 666 - அடிகளைக் கொண்டது. மோனை, எதுகை நயங்களுடன், அடிகளில் சரணம் என முடியும் ஒவ்வொரு பகுதியளவினும் வெண்டளை பிறழாது, செவ்விய உயரிய நடையில், செம்பொருள் செறிய அமைந்து, படிக்குந்தோறும் பெரிதும் இன்பம் பயப்பது இப்பகுதி.

உதாரணமாக,

> "எங்ஙனே என்னை இயக்கத் திருவுளம்
> அங்ஙனே என்னை அசைத்தாள் சரணம்"—

என்னும் அருமை அடிகளைக் கண்டு களிக்க.

இவ் வகவல் சித்தூர் வழக்கறிஞரும் ஸ்ரீரமண பக்தருமான திருவாளர் தேவராஜ முதலியாரவர்களின் விருப்பத்திற்கிணங்கிப் பாடப்பெற்றது என்பது—

"ஆவலா யிவ்வோ ரகவ லிசைப்பித்த
தேவரா யன்மகிழ் தேவா சரணம்"—

என வரும் அடிகளாற் புலப்படுகின்றது.

இரண்டாம் பகுதி—சரணத் திருவெண்பா - இப்பகுதி ஒவ்வொரு வெண்பாவிலும் சரண் என முடிந்து, ஜெப முறைக்கும் பாராயணத்துக்கும் உதவியாம் வகையில் 108 - பாக்களைக் கொண்டு பொலிகின்றது. இப்பகுதியில் உள்ள பாக்கள் சொல்லழகும், பொருட் பொலிவும் நிறைந்து பக்திரசம் திகழும் மணிகளாக ஒளிர்கின்றன. இதற்கோர் உதாரணமாக—

'கருவே ரறக்காணும் கண்ணே ரமண
குருவே திருவருட் குன்றே—இருவேழும்
தோணுக்க மாடத் துலங்கும் பரசொருபத்
தாணுக்கந் தாராய் சரண்"—

என வரும் - 87 - ஆம் பாடலைப் பார்க்க.

மேற்சொன்ன இரண்டு பகுதிகளும் பொருள் முறைப்படி தக்க தலைப்புக்கள் காட்டப்பெற்றுள்ளன. இனி,

மூன்றும் பகுதி—'புனர்வசு வண்ணம்'—என்பது. இஃது அப்பர் சுவாமிகள் அருளிய 'ஆதிரை நாளால் அதுவண்ணம்'—என்னும் மகுடம் பூண்டு விளங்கும் "முத்துவிதானம்" என்னும் திருவாதிரைத் திருப்பதிக இயலைப் பின்பற்றி ஒவ்வொரு பாடலும் ஒவ்வொரு மணியென இலகும் அருமை வாய்ந்துள்ளது.

'எதாகிலும் ஓர்குற் றேவ லியற்றப் பெருமோவென்
றதேகினை வாவர் புனர்வசு நன்னா ளதுவண்ணம்'—

என வரும் அடிகள் பகவானது ஜயந்தி நாளாம் புனர்வசு நாளிற் கூடுந் தொண்டர்கள் பணி செய விழைதலை வெகு அழகாக எடுத்துக் காட்டுகின்றன.

நான்காம் பகுதி—பிரார்த்தனை மாலை - இஃது ஆறுசீர் கொண்டதாய் வெண்டளை பிறழா வகையில் பிரார்த்தனை வகையாம் பாமலர்களை அன்பு எனப்படும் நாரினால் யாத்துள்ள ஓர் அருமைப் பதிகம்.

ஐந்தாம் பகுதி—திருப்பல்லாண்டு. இது பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடப்பட்ட பதிகம். பக்தி ரசமும் பக்திப் பெருக்கால் உண்டாய ஆவேசமும் பாடல் தோறும் ததும்பும் பதிகம்.

ஆறும் பகுதியும் திருப்பல்லாண்டே—இப்பகுதி ஸ்ரீ ரமண பகவானது தொண்டர் குழாம் களிக்க - அக் குழாத்துட் சிறந்த பிரம்மஸ்ரீ நாராயண ஐயர் வேண்டு கோட்படி பாடப்பட்டு அஷ்டோத்தர சதமாக (108-பாடலாக) இனிது அமைந்துள்ளது. மேலும், உனைத் துதிக்கப் *"பொங்குகின்றதென் ஆசை"—எனப் பார்வதி தேவியார் கூறியவாறு பொங்கி யெழுந்த ஆசையின் பயனாக நின்று, நூலாசிரியரது குதூகலத்தைப் பொலிவுபெறக் காட்டத் தக்கதான ஐஞ்சீரால் அமைந்த கலிநிலைத்துறைப் பாவாக இப்பகுதி அமைந்தது பகவானது திருவருளே.

ஏழாம் பகுதியும்-திருப்பல்லாண்டே. இஃது ஒன்பதாந் திருமுறையில் உள்ள "மன்னுக தில்லை" என்னும் திருப் பதிக இயலைத் தழுவி வெண்டளை பிறழா வகையில் அமைந்தது.

---

*பெரிய புராணம் - திருக் குறிப்புத் தொண்டர் : 52.

எட்டாம் பகுதி—வாழ்த்து. இது வாழ்த்துக்கு ஏற்ற தாழிசைப் பாவில் அமைந்து அடிகள் தோறும் வெண்டளை பிறழா நிலையில் உள்ளது. இறைவன் வாழ்க, இறைவன் திருக்கோயில் வாழ்க, ஞானியர் வாழ்க, பாவாணர் வாழ்க, பக்தர்கள் வாழ்க, வாழ்க நல்லதெலாம்—என வாழ்த்தி உலகு நன்மை பெறுக என்னுங் கருத்துடன் பொலிவன இவ் வாழ்த்துப் பாக்கள்.

எனவே, "புத்திக் கமலத் துருகிப் பெருகித் தத்திக் கரைபுரளும்" முருகனாது பக்திப் பெருக்குக்கு இந்நூல் ஓர் அரிய சான்றாகும். மேலும், 'கரை புரளும்' என்பதற்கு அறிகுறியாகும்-இந்நூல் முடிந்த பின்னரும் அமைந்துள்ள அநுபந்தம். நிற்க.

**மூலை யிருந்தாரை முற்றத்தே விட்டவர்**
**சாலப் பெரியரென் றுந்தீபற**
**தவத்திற் றலைவரென் றுந்தீபற—என்னும்**

திருவுந்தியார் இங்கு நினைவுறற்பாலது. மூலையிருந்த இந்நூலாசிரியராம் கண்ண - முருகனாரை முற்றத்தே விட்ட பெரியார் யார்? அங்ஙனம் அவரை முற்றத்தே விட்டுத் தவத்திற் றலைவராச் சிறந்தார் யார்?—எனில் - அவரே ஸ்ரீரமணபாதாநந்தர் - எனும் பெரியார். அவரின்றேல், 'ஸ்ரீ ரமண சந்நிதி முறை'—என்னும் நூலைக் கண்டிருப்போமோ? ஸ்ரீ ரமண தேவ மாலை, குருவாசகக் கோவை என்னும் அரிய பாமாலைகளையும், ஸ்ரீ ரமண சரணப் பல்லாண்டு எனப்பெயரிய இந்நூலையும் பார்த்திருப்போமோ? இந்நூல்களில்உள்ள தெவிட்டாத இன்பத்தைப் பருகியிருப்போமோ? இந்நூல்களைத் தமிழுலகுக்குத் தந்த பெருங் கருணையால்—'தோன்றிற் புகழொடு தோன்றுக'-என்னுங்

திருக்குறளுக்கு இலக்காய் அடியார்க்கடியராம் பெருமை வாய்ந்து ஸ்ரீ ரமண பாதாநந்தர் உலகிற் பொன்றாப் புகழொடும் பொலிகின்றனர் - இனியும் பொலிவர். இவர் தமிழ்நாட்டுக்குச் செய்துள்ள தொண்டு பெருந்தொண்டு. இவர் இதனால் அடையும் பேறு பெறற்கரிய பேறும்—என்க.

பகவானது அருள், தன்மை, பெருமை, அருமை, எளிமை, வேடம் முதலிய பல குணங்களையும் எடுத்துக் காட்டித் தமிழ்ச்சுவையும் ஓசையின்பமும் மேம்படு நிலையில் நூலாசிரியர் தமது "ஆர்வம் பெருகுதல் அளவின்றால்" என்னுந் தகைமையிற் பாடிய இந்நூல் வாழி, இந்நூலின் ஆசிரியர் வாழி, நூலாசிரியரின் இதயத்திருந்து அவரை இயக்கி இப் புகழ் நூலை உலகுக்கு அருளிய திருவருள் வாழி, நூலை அச்சிட்டு வெளியிட்ட பெரியார் வாழி, இந்நூலின் உண்மைகளை உணர்ந்து நன்மை கடைப்பிடிப்போர் வாழி—என ஏத்தி இறைவன் திருவடித் தாமரைகளைப் பணிவோமாக.

சென்னை
20-12-43 } **வ. சு. செங்கல்வராய பிள்ளை, எம். ஏ.**

---

உ

திருத்தணிகேசன் துணை

# சிறப்புப்பாயிரம்

"தணிகைமணி" ராவ்பஹதூர்,
வ. சு. செங்கல்வராய பிள்ளையவர்கள், எம். ஏ.
(Retired Personal Assistant to the Inspector General of Registration)
இயற்றியது

அரணம் அவனென் றறிந்தே ரமண
சரணப்பல் லாண்டதனைத் தந்தார்—திரணம்
உலகிய லின்ப உறவென் றுணர்ந்த
கலைஞர்பிரான் கண்ணமுருகர். க

அகமடங்கி நானுரென் றுய்ந்தாய்ந் துளத்தே
சகமடங்க உண்மை தழைத்தார்—பகவன்
திருவருளைக் கொண்டு சிவஞானம் பெற்றுக்
கருவைவென்ற கண்ணமுருகர். உ

பகவற் குனையர்ப் பணஞ்செய் வதுவே
சுகவைப் பெனவெடுத்துச் சொல்லும்—முகவைநகர்க்
கண்ண முருகர் கவிப்பொருளை யோர்ந்துணர்ந்து
நண்ணுவம்நாம் கிட்டா நலம். ங

மூலையிலே யாவர்க்குந் தெரியாதிங்
கமர்ந்திருந்த முருக னுரைக்
காலையிலே தோன்றுகதி ரோனெனவே
தமிழுலகங் காணக் காட்டி
ஆலையிலே கிடைத்தபுதுக் கருப்பஞ்சா
றனஇந்நூல் அளித்தார் நல்ல
வேலையிலே சோர்வுபடா ரமணபா
தாநந்த விறன்மிக் காரே. ச



ஸ்ரீரமணபகவான்

உ

சிவமயம்

# ஸ்ரீ ரமண சரணப் பல்லாண்டு

## க. சரணத் திருவகவல்

### திருவவதாரச் சிறப்பு

(நேரிசை யாசிரியப்பா)

திருச்சிற்றம்பலம்

அருள்விளை யாட்டுக் கரங்கமா விந்த
மருள்வை யகத்தை மகிழ்ந்தாய் சரணம்
உத்தரம் பெற்ற வுயர்ச்சியை யுண்மையே
தக்கிணம் பெற்றுத் தலைசிறந் தோங்க
உயரிய விண்மணி யுற்பவித் தாங்கே
ஜயஜய நின்னவ தாரச் சிறப்பாற்
புவிமகள் சென்னியிற் பொன்னடி சாத்திக்
குவிமலி பாவங் குலைத்தோய் சரணம்
மலர்தலை ஞால மயங்கிருள் பாறப்
புலர்தலை மிக்குப் புரிந்தோய் சரணம்
அரைமாத் திரையி னருத்தமாப் போற்றும்
பரமார்த்த மோனப் பதத்தாய் சரணம்
பாண்டிச் சுழியற் பதியோ டருணையை
ஈண்டித் தொடர்புற யாத்தோய் சரணம்

கமனிய மாவென் கருத்தைக் கவர்ந்த
ரமணிய பாத ரமணா சரணம்
முனிநா யகமா முனைத்துல கெல்லாம்
தனிநா யகஞ்செய் சதிரா சரணம்
விழுமிய செம்பொருள் வித்தக ஞானம்
கெழுமிய சோண கிரீசா சரணம்

## புராதனச் சிறப்பு

இமயப் பொருப்பி னிமையவர் போற்ற
உமையோ டமர்ந்த வுறவா சரணம்
தொல்லம் புவிக்குந் துறக்கவீட் டுக்குமே
நல்லம்மை யப்பனு நம்பா சரணம்
தரணமா வேதந் தலையாற் பணியும்
புரணமாம் போதப் பொருளோய் சரணம்
நோக்குவாய் நோக்குறு நோக்கத் திலேசானே
ஆக்குவாய் காப்பா யகில மடங்கலும்
ஊழிநாட் டன்னு ளுருத்திரம் பொங்கிவெந்
நூழிலாட் டுச்செய் நொடியா சரணம்
ஊடிய மோடியை யூர்த்துவ தாண்டவம்
ஆடி யடர்த்த வடியா சரணம்

## சொரூபச் சிறப்பு

மருட்புலந் துன்று மனக்கற் பனைதீர்
அருட்பொலஞ் சோதி யடியா சரணம்
பொன்மய மானபல் பூண்போ லகிலமும்
தன்மய மாகத் தழைத்தோய் சரணம்
திருவரு ளின்பத் திகழ்ச்சிசேர் பாதத்
துருவிய வெண்ணி லுலகா சரணம்
குடும்ப சுகத்தைக் குதூகல மாக
உடும்பெனப் பற்று முளத்து வெளிற்றர்க்

கரும்பெற லின்பத் தழிவில் சொரூபக்
கரும்பா கடவுட் கனியா சரணம்
பிராப்பிய மாகப் பிறங்குசச் சித்தாம்
பராற்பர தம்ம பதத்தாய் சரணம்
மன்னிய வின்னருள் வாய்ப்புற் றிதயத்தே
தன்னிய லாய்ந்து தலைப்பட்ட மன்னுயிர்
நிம்மதி முற்ற நிகழ்சிற் பரானந்த
தம்ம பதமலர்த் தாளா சரணம்
காலமே தானாக் கலந்தோய் கழிவிலா
வால வடிவென்றும் வாய்ந்தோய் சரணம்
வேறு படாத வியன்பர மாவிளங்
கூறு படாத வுடம்பா சரணம்
மூண்டார்த் தெழுங்கொழு மோக வகந்தையர்
தீண்டாத் திருமேனிச் செம்மான் சரணம்
அலங்கலி னென்று மராப்புல னின்றித்
துலங்குமெய்ஞ் ஞான சொரூபா சரணம்
ஆய்ந்தநெஞ் சத்தே யறிவுண்மை யாவகம்
தோய்ந்து விளங்கு சொரூபா சரணம்
அமங்கல மான வவிச்சைதீண் டாத
சுமங்கல ஞான சொரூபா சரணம்
சூதா மயக்கச் சுழற்சிப் படர்கெட
வேதா கமங்கள் விரித்தோய் சரணம்
பாணித்த லின்றி யுளத்துட் பதியமெய்
ஆணித் தரமா வறைவோய் சரணம்
மெய்ப்பொரு ளுண்மை விளம்புந் திறத்தின்மற்
றொப்புயர் வில்லா வொருவா சரணம்
திட்பமு நுட்பமுஞ் சேரச் சொலுமதி
யொட்ப முடைச்சீ ருரையா சரணம்

சிவமணஞ் சேருந் திருவாய் மொழியாற்
பவமணஞ் சாய்க்கும் பகவா சரணம் ௭௦
களஞ்சிய மாகக் கலைபல வற்றின்
வளஞ்சிறந் தோங்கு மனத்தாய் சரணம்
கலைக்கள மான கருத்தொடு சாந்தி
நிலைக்கள மாநிகழ் நெஞ்சா சரணம்
யானறத் தானு வியல்வுறுந் தற்பர ௭௫
வானிற் றிளைக்கு மனத்தாய் சரணம்
வாலறி வாந்தன் மகிமையே வாய்த்தமெய்
யாலய மாக வமர்வாய் சரணம்
அறிவாய்ச் செறிவா யவிர்மெய் யகத்து
டுறைவா லறிவா முளவா சரணம் ௮௦
சிந்தா குலஞ்செய் தெருமரல் போக்குறும்
நந்தா மணிவிளக் கெந்தாய் சரணம்
பகட்டு மனக்கற் பனைதீ ரிதயப்
பொகுட்டு மிசைச்சேர் புனிதா சரணம்
தியானத்தாற் சித்தத்து வாதனை மாண்ட ௮௫
மயானத்தே யாடி மகிழ்வாய் சரணம்
திருத்தமாச் சித்தந் தெளியக்கா லூன்றி
நிருத்தம் புரியு நிமலா சரணம்

## உருவகச் சிறப்பு

இன்பமொ டன்பொருங் கேய்ந்த கடைக்கணின்
மன்பதை யோம்பு மகிபா சரணம் ௯௦
பற்றலும் பற்றப் படலுமா மின்னருட்
கொற்றங் குலவுறுங் கோமான் சரணம்
தேடா தடைந்த திருவருட் செல்வஞ்சேர்
வீடா மிதயத்து வேந்தா சரணம்

மகிதலத் தோரை மயக்கி வருத்தும்
பகைமலி மாயப் படையைச் செகுத்து
விளங்குமெய்ஞ் ஞான விறல்வெற்றி வீரர்
தளங்குலவு சேனைத் தலைவா சரணம்
செயற்கருஞ் செய்கை திறன்படச் செய்து
மயக்கற முற்றிய மள்ளா சரணம்
நிலையார்ந்த ஞான நிறையார்ந்த செல்வா
பலிதேர்ந்து வாழுங்கா பாலீ சரணம்
சிற்கன மாகத் திகழ்விசும் பாமிகச்
சிக்கன வாழ்க்கைசேர் செல்வா சரணம்
செந்தண்மை பூண்ட திறத்தாற் சிறந்தமெய்
யந்தண னுவோங் கறவோய் சரணம்
உளத்தைக் களைகட் டுழுதுசிவ போகம்
அளித்தருள் சீலவே ளாளா சரணம்
அருட்குல மாமெய் யடியவ ருள்ளத்
திருட்குலஞ் சாய்க்கு மிரவீ சரணம்
உலக மயக்கிரு ளூடு கடந்து
குலவு சிவச்சுடர்க் கோமான் சரணம்

## திருவியற் சிறப்பு

உலகம் பரத்தை யொழிந்துவே றுகா
திலகம் பரமா மியல்பா சரணம்
உலகில் விழியா யுறங்காய் சொரூபத்
திலகு விழிப்பா மியல்பா சரணம்
வேறுப் புறத்து விளையா டினுந்தனி
வீறுன்ம வத்துவா மிக்காய் சரணம்
தத்துவ சுத்தமாங் தற்பர சிற்பர
தத்துவ மாகத் தழைப்போய் சரணம்

அன்பே சிவமா யறிவே வடிவமாய்
இன்பேழ் கடலா மிறைவா சரணம்
பரியா யணுவினு நுண்ணியாய் பார்த்தற்
கரியா யெளியா யடியேன் சரணம்
தெரிவனு நீயே தெரிப்பனு நீயே
தெரிவுநீ தானாத் திகழ்வாய் சரணம்
பாணினும் பாட்டினும் பாலினுந் தேனினும்
தூணினுந் தூய்யினுந் தொக்காய் சரணம்
கதுவொளி யொன்றயல் காணா விசுத்தப்
பொதுவெளி யாகப் பொலிவோய் சரணம்
சித்தமில் சுத்தசச் சித்தா மியல்புகொண்
டொத்தநோக் காலொன் றொடுந்தான் படாதே
மருண்டுந் தெருண்டு முயிர்செல் வழியாம்
இரண்டினுஞ் சான்று யிருப்போய் சரணம்
இன்பதுன் பங்க ளிருவினைப் பாங்குற
மன்பதுக் கூட்டி மகிழ்வோய் சரணம்
சச்சிதா னந்தமாந் தன்னின் மறுதலை
குச்சிதா கந்தைக் குடில மனத்தின்
வறுங்கற் பனையா வழுக்கி யிழுக்கப்
பிறங்குசுத் தான்மப் பெருமான் சரணம்
முன்னடி யாக முயங்குசச் சித்தெனாத்
தன்னடி யாய சமஸ்தா சரணம்
சன்னிதி சாருமோர் சாதன மன்றிமற்
றன்னியம் வேண்டா வருளா சரணம்
காண்டலை யன்றிக் கருதலு முட்பட
வேண்டலில் லாத விசதா சரணம்
கலிநலிந் தேங்கக் கதிர்கா லருட்செம்
மலைமலிந் தோங்குமெய்ம் மாண்பா சரணம்

## ஞானத் திருக்கோலச் சிறப்பு

ஓத்தின் முடியா முபநிடக் காட்சிக்கு
நேத்திர மாய நிரதா சரணம்
வளத்தெளி வாம்பர வாழ்க்கை முதலா
உளத்தொளி ருண்மை யுணர்வா சரணம்
காவிய நுட்பக் கருத்தொடு கைபுனை
ஓவிய நுட்ப வுணர்வா சரணம்
தாயக மோடு சகலஞா னத்துக்கும்
நாயக மாம்பிரஞ் ஞாந சரணம்
கடபட ஞானங் கழிந்தசுத் தான்ம
திடஞான மோனத் தெளிவா சரணம்
அறிவெனத் தோற்றினு மல்லா வகத்தை
அறிவுறுத் துண்மை யறிவா சரணம்
தொகத்தத் துவங்கடோன் றுந்தா யகமா
அகத்தே யவிர்வா லறிவா சரணம்
கோலா கலமாக் குலவுந் திரிபுடிக்
காலா கலமெய் யறிவா சரணம்

## திருப்புகழ்ச் சிறப்பு

சேதன சுத்தமாத் தீர்ந்ததா னேதனக்
காதன மாக வமர்ந்தாய் சரணம்
வினீதமாத் தன்னிற்றுன் வீற்றிருந் தாற்றும்
விநோத மகத்துவ மிக்காய் சரணம்
பகுதி விகுதி யெனும்பாற் படாதே
வெகுவித மான விலாசா சரணம்
திருமா வளவர்தஞ் செல்வமென் றியார்க்கும்
உரிதாய ஞான வுதாரா சரணம்
தனக்கென வாழாப் பிறர்க்குரி யாளன்
எனக்கிளர் வண்புக ழெந்தாய் சரணம்

புவன மனைத்தும் புரப்பதுன் சுத்த
மவுனத் திருவருண் மாண்பாஞ் சரணம்
அனந்த விதத்தா லனந்தனே தான்சொல்
லினாந்தன் புகழ்க்கெல்லை யில்லாய் சரணம்
நேதியா லுன்னை நிகழ்த்துவ தன்றிமற்
றியாதினா லுங்கூற் றியலாய் சரணம்

## பொதுவி லருட்செயல்

சிற்பத் தொழினுட்பஞ் சேர்மாயைத் திட்பத்தாற்
கற்பித் துலகுயிர் காப்போய் சரணம்
நனாமகன் கண்ணே கனாவிற்பல் பேதம்
எனாமனக் கற்பனை யின்றிறத் தாலே
துவிதமல் லாநின் சொரூபத்தின் கண்ணே
விவிதபே தந்தோற்று விப்போய் சரணம்
மனோகர மாப்பா மரர்க்கணி மாதி
தனாகர மாகத் தழைப்போய் சரணம்
மாட்சிபோற் றோன்றி மயங்குவ யாவுமெய்க்
காட்சியா லாட்சிகொள் கண்ணா சரணம்
சித்தமில் சுத்தசச் சிற்பர மாயநீ
புத்தனு மூடனும் போல்வாய் சரணம்
அகலிடத் தெல்லார் தமக்கும் பொதுவாம்
புகலிட மாவொளிர் புத்தா சரணம்
அழுதகண் ணீரி லமர்வோய் வழுத்தித்
தொழுதகை துன்பந் துடைப்போய் சரணம்
வளைக்குமன் பான்மகிழ் மாணடி யார்க்கு
விளைக்குமா னந்த மிருடா சரணம்
மதுகுணத் தாலே மடுத்தார் மனத்தைக்
குதுகலஞ் செய்யுங் குணாளா சரணம்

ஓலமிட் டாருக் குருதி பயத்தலிற்
சாலச் சிறந்தமெய்ச் சான்றோய் சரணம்
புத்தகந் தீண்டாதே புந்திக் கனுபவ
வித்தக ஞானம் விளைப்போய் சரணம்
தவக்கொழுந் தாச்சுடர் தத்துவ ஞான
சிவக்கொழுந் தாத்திகழ் சிட்டா சரணம்
நோற்றார் தமக்கு நுனித்துணர் பார்வையிற்
றேற்றமா வுண்மை தெரிப்போய் சரணம்
உள்ளுவா ருள்ளத் துளனா னெனவொளி
தெள்ளுமான் மாவாத் திகழ்வோய் சரணம்
தானேதா மாகவுந் தாமேதா னாகவும்
தேனேபோ லன்பரைச் செய்வோய் சரணம்
உனைக்கும்பி டன்பரை யும்பரோ டிம்பர்
இனிக்கும் பிடவைக்கு மெந்தாய் சரணம்
அத்தக நிற்கு மடியார்க் கனுபவ
வித்தக ஞானம் விளைப்போய் சரணம்
திண்ணிய ராவுனை யெண்ணியே சித்தத்து
நண்ணியார் தம்மை நயப்போய் சரணம்
உளக்கோயிற் கண்ணே யுபாசிப்போர்க் காற்ற
விளக்கமா யின்பம் விளைப்போய் சரணம்
கருத்தொக்க வெண்ணினார் காமங்கை கூட்டும்
திருத்தக்க தேவாதி தேவா சரணம்
இகழ்ச்சிசேர் புந்தி யிருட்டை வெருட்டும்
திகழ்ச்சிசேர் ஞானத் திரளா சரணம்
கற்பனை யாலே கலங்கு மனோமயச்
சற்பனை மாய்க்குஞ் சதுரா சரணம்
விண்மணி யாக விளங்கியே விஞ்சைசேர்
கண்மணி யாகக் கலப்போய் சரணம்

பல்வகை யின்பும் பரசுக வெள்ளத்தின்
சில்வகை நொப்புத் திரள்காண் சரணம் உ௩0
பொருட்பாகு பாடா மகம்புற மென்ப
அருட்பார்வை தன்னி லயிக்கஞ் சரணம்
அகமே புறத்தை யறத்தன் மயமா
முகம்புரிந் தாளு முழுவா சரணம்
மறைப்பொரு ளாநின் வடிவமே யின்பத் உ௩௫
துறைப்பொரு ளாகத் துணிந்தேன் சரணம்
முப்புடி தன்னை முறியடித் தோட்டுறும்
செப்படி வித்தைத் திறத்தோய் சரணம்
முடியடி காண முடியா வளத்து
முடிவிடு வித்தருண் மோன சரணம் உ௪0

## குறையெடுத் துரைத்தல்

**து**யக்கரி தான சொரூபமா வுள்ளத்
துயிர்க்கரி யாக வுறைவோய் சரணம்
என்குறை யான்சொல வெண்ணுமுன் னேயதை
அங்குறை நீயே யறிவாய் சரணம்
உடலைநா னென்றுவந் தோம்பினேன் மோகக் உ௪௫
கடலைநா னெங்ஙன் கடப்பேன் சரணம்
சிவத்தே யழுந்தித் திளைத்தற் கறியேன்
பவத்தே யழுந்தப் படிந்தேன் சரணம்
அழுதழு தன்பா லகங்கசிந் தாரத்
தொழுதுன் சொரூப சுகந்திளைக் காதே உ௫0
உழுதசால் பின்னு முழுதைம் புலத்தே
பொழுதுவீண் போக்கிய புல்லேன் சரணம்
தெரியேன் சொரூபந் திளைக்கு முபாயம்
தரியே னருட்பெருந் தக்காய் சரணம்

பொல்லாப் புலத்திற் புலம்பினேன் புண்ணியா
கல்லா மனத்திற் கடையேன் சரணம்
ஒருக்கமில் லாத வுணர்வாற் புலத்தில்
வெருக்கொள வோடி வெறித்தேன் சரணம்
இன்பவீ டான விதயம் புகுந்திடென்
றன்பா லடித்தடித் தக்கா ரந் தீற்றி
விடயத்தி னின்று விமுகமா தற்காத்
தடைபற் பலவாற் றகைந்துறு திப்பட
நல்லதுக் காநீ நவிற்று மவற்றைநான்
அல்லதுக் கென்றுறழ்ந் தாய்ந்தேன் சரணம்
அதனாலே வன்கண னுவனை னாயேன்
கதனாலே வைதேன் கமிப்பாய் சரணம்
என்னை யகந்தையால் யானே தளைந்துகொண்
டுன்னையே நிந்திக்க லுற்றேன் சரணம்
உடலநா னென்னு முணர்வா மகந்தைப்
படலமா யத்தாற் பதைத்தேன் சரணம்
சித்துநா னென்னுந் திகழ்ச்சியாற் புந்தியைப்
புத்துணர் வாகப் புதுக்காய் சரணம்
களிமயக் காமகங் காரத் திறத்தால்
வெளிமயக் கத்து விளிந்தேன் சரணம்
அகட விகட வகந்தை யறவே
துகளறு போதந் துலக்காய் சரணம்
முளைமதி தன்னை முழுமதி யாகத்
திளைசடி லாவெனைத் தேற்றாய் சரணம்
மறிவறி யாதே மயங்கினேன் ஞாலத்
தறிவறி யாமை யறியேன் சரணம்
சச்சித்தா முன்னைத் தணந்த மறவியின்
அச்சத்தா லுட்கி யலந்தேன் சரணம்

ஏதத்தின் மிக்க விறப்புண்மை யாம்பிர
மாதத்துக் குண்மை மருந்தா சரணம்
செம்மைசேர் பாதத் திருவரு ளன்றிநான் உஅரு
எம்மையு மோர்பற் றிலாதேன் சரணம்
ஆண்டிட வென்னைநீ யாய்தலு நின்னையென்
ஆண்டவ னாக வறிந்தேன் சரணம்

## முறையிட் டிரத்தல்

ஆவா வழிந்தே னடிகட் கபயநான்
சாவா மருந்தாத் தழைத்தோய் சரணம் உகூ0
உபாதிக்கே யுண்மை யுதவுறும் பொல்லாக்
கபோதிக்குக் காட்சி யளித்தாள் சரணம்
நோக்கமே தீக்கையா நோக்கிக் கடைக்கணின்
ஆக்க மளித்தரு ளாசான் சரணம்
கண்ணிருந் துங்குழிக் கண்ணே விழுந்தழும் உகூரு
மண்ணனென் றென்னை மறுதே சரணம்
ஆணனென் றுலு மறிவறி யாதுழல்
வீணனென் றென்னை வெறுதே சரணம்
அளியனா வுன்னை யடைந்தே னகிலக்
களைகணா நீயே கதிகாண் சரணம் ௩00
போத மலங்கப் புறப்படும் பல்வகை
வாதனை யாலே வலிதடர்ப் புண்ட
நெருக்கடி தீர நினைந்துன் னடிக்கீழ்
அருட்குடி யாக வடைந்தேன் சரணம்
கலித்தளைப் பட்டுக் கலங்கினேன் சித்தம் ௩0ரு
சலித்திளைத் துன்னடி சார்ந்தேன் சரணம்
உனைச்சரண் புக்கார்க் கொரானோர் குறையும்
தினைத்துமின் றுநன்கு தேர்ந்தேன் சரணம்

பின்னப் படாநின் பெரும்பூ ரணவருள்
வன்னப் படமனம் வாங்காய் சரணம்
அருளடிக் கூறா யறுக்கப் படினே
மருளுடைச் சித்த மலங்கெடு மன்றிமற்
றென்றா லதனை யிறுத்தலெவ் வாற்றானும்
என்றானு மாவ திலைகாண் சரணம்
குஞ்சையே நெஞ்சொடு கொஞ்சுமன் பாவணிற்
குஞ்சுபோல் யானுமோர் கொஞ்சன் சரணம்
மிஞ்சிடிற் கெஞ்சுவேன் மீதே யிரங்குதி
வஞ்சியா தின்னருள் வள்ளால் சரணம்
செயுஞ்சோ தனைக்குச் சிறிதுமா ளல்லேன்
நயஞ்சே ரருட்கதி நல்காய் சரணம்
அருண்மந் தணநன் கறிந்தவர்க் காளாப்
பொருண்மலி போதம் புணர்ப்பாய் சரணம்
அல்வழிக் கண்ணின் றகல்வித் தடியரை
நல்வழிக் காண்குரு நாதா சரணம்
அரந்தை கடிந்தரு ளாற்றலின் கண்ணே
துரந்தர வாண்டுகை தூக்காய் சரணம்
கைதூக்கி யன்பர் கருத்தைத் தலையளி
செய்தூக்கு மின்னருட் செல்வா சரணம்
அருளாழி யாலிவ் வகிலமுங் காப்பாய்
மருளாழி நின்றென்னை வாங்காய் சரணம்
முறையோ வடிநாயேன் மோகத்தின் மூழ்கல்
அறையோ கரையேற்றி யாளாய் சரணம்
உலகியற் சேற்றி னுழன்றே னருளின்
குலவுநீ ராட்டிக் குறிக்கொள் சரணம்
துலங்குறு சத்துவ சுத்தமாத் தானே
இலங்கு மனோமணி லிங்கா சரணம்

அந்தலிங் கத்தை யறிவால் வழிபடு
சொந்தலிங்க மாகத் தொழுதேன் சரணம்
உருக்கமு மில்லே னெருக்கமு மில்லேன்
வெருக்கொள நோக்கி விழிப்பேன் சரணம்
ஆட்கொ ளடிக்கென்னை யாளாத் திருவுளப்
பீட்கொள் கருணைப் பெருமான் சரணம்
ஆண்டா யடிகே ளகந்தைத் தெருமரல்
ஈண்டா தகத்தை யிலக்காய் சரணம்
தேறித் தெளியவென் சித்த நினைப்பலை
ஆறி யமர வருள்வாய் சரணம்
பாழ்வா தனையறப் பண்ணருட் பாக்கிய
வாழ்வா சரணமென் வைப்பா சரணம்
தாழங்காய் போல்வேன் சமுசார மாமனத்
தாழங்காற் பட்டே னருள்வாய் சரணம்
இறைவா வருளென் னிதயத் துறைப்பத்
தறைவா யெனக்குத் தருவாய் சரணம்
நின்னடி யன்றி நினைந்திடத் தாங்கலா
உன்னடி யாரி னொருத்தனு வென்னுளத்
தன்னிய சிந்தைக் கவகாச மின்றிநின்
மெய்ந்நிறை வாக விளங்காய் சரணம்
மோனமே ஞான முடிவென் றடங்குறத்
தீனனேன் புந்தியைத் தேற்றாய் சரணம்
சிவசிவ வென்றுநின் சேவடிக் கண்ணே
அவசமா நிற்க வருள்வாய் சரணம்
தன்னிழப் பேபயத் தக்கதொண் டாமென
மன்னுவப் பாங்குரு மாண்பா சரணம்
எங்ஙனே யென்னை யியக்கத் திருவுளம்
அங்ஙனே யென்னை யசைத்தாள் சரணம்

அடித்துணைக் கோல மடைக்கலம் புக்கேன் ௩௬௫
அடித்தது போது மணைத்தாள் சரணம்
துடைக்கினும் போகேன் றறந்தே னுலகை
அடைக்கல முன்னை யடைந்தேன் சரணம்
அடைக்கலங் காக்கு மறவோய் குறிக்கொண்
டிடைக்கல மாகா தெனையாள் சரணம் ௩௭0
வசித்துவத் தாலே வசிகரித் தென்னைப்
பசுத்துவ முற்றப் பறித்தாள் சரணம்
தேவா திருவருட் செல்வா திய்ங்கினேன்
ஆவா வடியேற் கருள்வாய் சரணம்
மாவடி வாணவென் மத்தகத் துன்மணிச் ௩௭௫
சேவடி சூட்டித் திருத்தாய் சரணம்
செல்வத் திருவருட் சேவடி சேர்தலே
கல்விப் பயனெனக் கண்டேன் சரணம்
ஓதா துணர்ந்த வுவாத்திநீ யென்மன
மேதா மணியா விளங்காய் சரணம் ௩௮0
அசலமா நின்றன் னடியென் னகத்துக்
குசலமீ தூரக் குடிகொள் சரணம்
தெரிவா வொளிருந் திருவடிக் காளாத்
தெரிவாய் திருவருட் சீமான் சரணம்
பணைத்தமோ கப்பாழ் படராப் பதத்தோ ௩௮௫
டிணைத்தருள் விச்சை யிலக்காய் சரணம்
மருட்கட லாடி மயங்கி மருண்டேன்
அருட்கட லாட்டி யருள்வாய் சரணம்
விடயமண் டின்று வெறுத்த வெனக்குன்
னுடையவுண் கண்ணமு தூட்டாய் சரணம் ௩௯0
கைவல் லியமாங் கமல பதந்திகழ்
தெய்வப் பிரானெனைத் தேற்றாய் சரணம்

மருட்கடல் வீழ்ந்துநான் மங்குறக் காண்டல்
அருட்கழல் வண்மைக் கடாதே சரணம்
காலம் பெறவெனைக் காவா யருண்ஞான
சீலம் பெறவுனைச் சேர்ந்தேன் சரணம்
புழுவாய்ப் பிறக்கினும் புந்தியுட் பாதம்
வழுவா திருக்க வழங்காய் சரணம்
கீடமென் றாலுங் கிளரடிச் சிந்தனை
வாடலின் றேலது மாண்பாஞ் சரணம்
கற்றுச் சொலியாக் கழலடிக் கெனையாட்
பற்றிக் கொளுவாய் பரமா சரணம்
குணியோ வவகுணி யோவருட் பாதப்
பணியா ளடியேன் பணிகொள் சரணம்
விற்றுக் கொளற்கும் விருப்பமே போலநான்
ஒற்றிவைத் தற்கு முரியேன் சரணம்
கெட்டாலு நின்னாற் கெடலன்றிக் கிஞ்சித்தும்
ஒட்டாரின் வாழ்வதற் கொவ்வேன் சரணம்
தாளுந் தலையுந் தடுமாறும் பேதையேன்
ஆளுவ துன்கட னையா சரணம்
அடிமுடி யான வயிக்கிய ஞானக்
கொடுமுடி மோன குணாளா சரணம்
உடனா னெனுஞ்சட வுள்ள முருகின்
உடனா வொளிர்வா னுணர்வா சரணம்
காரான் பசுவிளங் கன்றாக வென்னுயிர்
நீரா வுருக நிகழ்த்தாய் சரணம்
அன்புரு வாநின் னடியை நினைந்தவ்
வன்புரு வாக வருள்வாய் சரணம்
அன்பாக் கரைந்த வகத்துளே யன்றிமற்
றின்ப மகிழ்ச்சி யெழாதே சரணம்

புகழ்பூத் தொளிரருட் புண்ணியா நாயேன்
மகிழ்பூத் தொளிர மலர்த்தாள் சரணம்
நித்த மணாளா நிரம்ப வழகியா
சுத்த குணாளா தொழும்பன் சரணம்
அழகா சரண மகலத் தணிந்த
புழுகலங் காரநின் பொற்றாள் சரணம்
சுகந்தரா யாநின் சொருபத்தோ டொன்ற
முகந்தரா யெற்கு முகுந்தா சரணம்
ஜங்கம லிங்கமாத் தாவர லிங்கத்தின்
மங்கல நல்கு மணாளா சரணம்
வேளைக்கு வேளை விழைந்துவந் துன்றடந்
தோளைக் குளிரத் தொழுதேன் சரணம்
மன்னிய நின்னருள் வண்மையே துன்னிய
என்னியல் பாக்கிய மெந்தாய் சரணம்
மன்னவா வுன்னை மடுக்க விதும்பிய
என்னவா முற்றவீ டேற்றாய் சரணம்
அமிதசந் தாப மகற்றா யருட்பே
ரமுதசஞ் சீவியா மண்ணல் சரணம்
மதாலச மாக மனந்தன் மயஞ்செய்
சுதாரச மான சொரூபா சரணம்
யானா தரத்தா லிதயத் துனையொன்றத்
தானேதா னாகத் தழைப்பாய் சரணம்
என்றனை யான்பணிந் தேத்திக் கருதவே
நன்றெனை யாண்டமெய்ஞ் ஞானா சரணம்

## அனுக்கிரக வனுபவம்

நீயே துதிக்க நிகழ்த்திய தன்மியின்
நாயேன் றுதித்திட நானார் சரணம்

செவ்வியாய் பூனைத் திறத்தா லடியனைக்
கவ்வியாட் கொண்ட கருத்தா சரணம்
நல்வாக் களித்தமெய்ஞ் ஞான வுலகெலாம்
செல்வாக் குடையசச் சித்தா சரணம்
பக்குவந் தோற்றுப் பதகன் றனக்குநீ
மிக்குவந் தாற்றிய வீங்கருள் வண்மையை
முன்னே யுரைப்பின் முகமனென் றென்மொழி
பின்னிடை கின்றது பெம்மான் சரணம்
தனைவேறு கொண்டசொற் றூன்கேட்க நாணும்
நனிநா கரிகமெய்ந் நம்பா சரணம்
இனையை யெனக்குநீ யின்னன்யா னென்று
புனையிற்புல் லென்னப் புலப்போய் சரணம்
என்னி னினிய ரெவரு மெனக்கிலர்
என்னினு நீமிக் கினியா சரணம்
வெருவரக் கவ்விய விஞ்ஞான மோகத்
தெருமரல் போக்கிய தேஜா சரணம்
பித்தனு மென்னைப் பெரிதருள் வைத்திய
சித்தா சரணமென் செல்வா சரணம்
உழையிருத் திக்கொண் டுவந்துநா யேனைப்
பிழைபொறுத் தாண்ட பெரியாய் சரணம்
பொருவே றிலாச்செம் பொருளே பொருளாத்
தெரிவனு வென்னைத் தெரித்தாய் சரணம்
ஓதுமெய்ஞ் ஞான வுறுதிசேர் கேள்வியிற்
காதுதோட் புண்டு களித்தேன் சரணம்
கள்ளியா வென்னைக் கரந்து வெளிப்படும்
ஒள்ளியா யென்னை யுடையாய் சரணம்
இகம்பர மென்னு மிரண்டெனக் கின்றி
அகம்பர மாக வளித்தாய் சரணம்

தவராஜ சிங்கா தமியே னுளத்தைச்
சிவராஜ தானியாச் செய்தாய் சரணம்
சொருபத்தி லொன்றாத் துலங்குமெய்ஞ் ஞானப்
பரபத்தி யுண்மை பளிச்சிட் டொளிர்வதாச்
செஞ்செவே யென்னைத் திருத்திப் பணிகொண்டு
தஞ்சமாத் தாங்கிய தாளா சரணம்
கயவனா மென்னைக் கலிநலி யாதே
நயவனா வாண்டவென் னம்பா சரணம்
அகந்தை யுடன்றெனை யார்ப்பரிக் காதே
அகழ்ந்தித யத்தே யடர்த்தாய் சரணம்
வெல்லப் படிவத்தை விண்டுதன் பூசனை
வெல்லப் படைக்கும் விசித்திர மென்று
நினக்கியா னென்னை நிவேதனஞ் செய்கை
எனக்கே நகைதரு மெந்தாய் சரணம்
உனக்கெனை யூணா வுதவினே னென்ற
மனக்கருத் தென்றன் மடங்காண் சரணம்
உடைமையா நானிற் கொழிந்தே னுடையாய்
கடமையெல் லாநான் கழிந்தேன் சரணம்
எண்ண மெலாநின் னிடமாக் கழிந்தொளிர்
வண்ண மனத்தான் மகிழ்ந்தேன் சரணம்
அண்ணால் சரண மபய பதங்கடைக்
கண்ணா லகமுறக் கண்டேன் சரணம்
பயங்கர மாகப் படர்கொடுங் கால
ஜயங்கர மாவுளஞ் சார்ந்தாய் சரணம்
பஞ்சையா மென்னைப் பரம்பர நின்னருள்
விஞ்சையால் வேறற வேட்டாய் சரணம்
தேனொடு பால்போற் றிளைத்துளத் தொன்றாகத்
தானொடு நானுந் தழைத்தேன் சரணம்

எனக்கு முனக்கு மிசைந்த பொருத்தந்
தனக்குத் திருவருள் சான்றுஞ் சரணம்
இருவேங் களையு மொருங்கே யிசைத்த
திருவருள் காண்டியென் றெய்வஞ் சரணம்
மனமகிழ்ந் தியானினி மற்றொரு தெய்வம்
கனவினு மெய்யாக் கருதேன் சரணம்
ஊத்தைமா யத்தே னுரவுநீர்ச் சேர்தலும்
தீர்த்தமா நன்று திகழ்ந்தேன் சரணம்
சீருஞ் சிறப்புஞ் செழித்தோ யெனதுளம்
தேருந் தெளிவாத் திகழ்வோய் சரணம்
களிசேர் மயக்கக் கலியிருட் கண்ணின்
றொளிசேர் வெளிதனி லுய்த்தோய் சரணம்
சிச்சடப் பேயா மகந்தையைச் செற்றவென்
அச்சுத சுத்தனா னான்மா சரணம்
உன்னை யடைந்தியா னொன்றுங் குறைவற
மன்னிய தானா மகிழ்ந்தேன் சரணம்
உரித்தா யுளத்தென் னுயிருக் குயிராத்
தரித்தாய் சரணந் தருமா சரணம்
இன்பக் கடலா வெழுந்து வளர்ந்தபே
ரன்புக் கடலா மகத்தாய் சரணம்
சேர்ந்தறி யாத செழுங்கைப் பிரானுனைச்
சார்ந்தறி வின்பந் தழைத்தேன் சரணம்
பவக்கடல் வற்றப் பதந்தரு சாந்த
சிவக்கட லாடித் திளைத்தேன் சரணம்
மோக வகந்தையின் மூடி யசச்சட
தேகமே நானாத் திரிந்த வெனைந்தன்
சொரூபச் சுடராருட் சோதியிற் போர்த்த
விரூப விலோசன மெய்யா சரணம்

அருளென் பதன்மெய்ப் பொருளா வகத்தே
தெருள்வதுன் மோனமாத் தேர்ந்தேன் சரணம்
செறிவா யொளிர்நின் சிவசொரூ பத்தை
அறிவே னறியே னறிவாய் சரணம்
அறிவொடு சும்மா வமர்தலே யுண்மைத்
திறமென வுள்ளந் தெளிந்தேன் சரணம்
சுகமது வன்றிமெய்த் துப்புர வாக
இகபர மெங்கினு மின்றே சரணம்
கருத்தத் துவமிலார் கன்மநீ தானே
திருத்துவ தாவுளந் தேர்ந்தேன் சரணம்
வாலறி வாயவான் மாவை விடுத்துமற்
றேலப் பிறிதொன்று மின்மையி னெந்தாய்
பிறர்நலந் தன்னதாப் பேணலே யுண்மை
யறநில மாக வறிந்தேன் சரணம்
அன்னிய புத்தி யகன்றிவ் வுலகத்துத்
தன்னிய னாகத் தழைத்தேன் சரணம்
திருவருட் செல்வமே செல்வமல் லான்மற்
றொருபொருட் பேறுளத் துள்ளேன் சரணம்
அருளவா வன்றி யயலவா வல்லின்
மருளவா வாக மதித்தேன் சரணம்
கருவூலக் காட்சிபோற் கண்ணுக் கினிய
திருவோலக் கத்திற் சிறுகொச்சை தன்னைக்
குணவானைப் போலக் குறிக்கொண்ட சத்தி
மணவாள நின்னருள் வாழி சரணம்

## தத்துவ மாலை

சத்திக்கு மூலமாந் தற்பர மாதலின்
முத்திக்கு வித்தா முதல்வா சரணம்

எதிர்ப்பொரு சத்தசத் தென்சொல் லிரண்டன்
பொதுப்பொரு ளாகப் பொலிவோய் சரணம்
தனித்தனி போலச் சரிக்கும்பல் ஜீவர்
இனத்தினு மொன்று வியல்வோய் சரணம் ருசூ௦
சகலத் தொடுந்தான் சமரச மாக
விகலமற் றோங்கும் விளக்கா சரணம்
யாவற் றையுந்தன் னிடமாப் புரந்தருள்
காவற் கதிரொளிக் கண்ணா சரணம்
உனையுணர்ந் தோர்மெய் யுளவரா மன்றிப் ருசூரு
பினையுணர்ந் தோர்கற் பிதர்காண் சரணம்
கற்பனா சத்தி விலாசக் கதிர்களா
உற்பவித் தன்னா ருழல்வார் சரணம்
உள்ளடங் குற்றோ ருறும்பத வுண்மையைத்
துள்ளுங் கருத்தினர் தோயார் சரணம் ருஎ௦
குருவடி வாகக் குலவுநின் ஞானத்
திருவடிச் சிந்தையே செல்வஞ் சரணம்
அருட்பாக் கியத்தா ருடையர்மற் றல்லா
மருட்பாக் கியத்தார் வறியார் சரணம்
கர்த்தத் துவந்தாங் கழிவதை யன்றிமற் ருஎரு
றெத்தகைத் தொண்டுந்தா னிச்சியாப் பூரண
சித்தாய சத்தின்கட் சித்தந் திளைத்தலால்
ஒத்தார்மிக் காரற் றுவப்பார் சரணம்
அரணா வதுநல் லறங்களுக் கெல்லாம்
சரணா கதியாத் தகுங்காண் சரணம் ருஅ௦
மிக்கவவ் வுண்மை விளங்க வுளங்கொளத்
தக்கனுஞ் சண்டியுஞ் சான்றுஞ் சரணம்
அடிச்சரண் சேரா ரறச்செயல் கொண்டே
படர்ச்சிதீர் சாந்தி படையார் சரணம்

சரணமாத் தன்னடி சார்ந்தவர்க் கல்லாற்
புரணவிஞ் ஞானம்பொய் போலுஞ் சரணம்
புத்தக ஞானம் பொருளெனக் கொள்ளார்மற்
றுத்தம ஞான வுறவோர் சரணம்
திகழ்ச்சிசே ருண்மைத் தெளிவாம் பதத்தை
இகழ்ச்சிசெய் தோரே யிறந்தோர் சரணம்
அருணமாந் தன்னடி யாய்ந்த வகத்தோர்க்
கிருணமென் றென்று மிலைகாண் சரணம்
சிதானந்த பூரணச் சேவடி சேர்ந்தார்
மதோன்மத்த ராக மகிழ்வார் சரணம்
சரண மடைந்தார் மரணங் கடந்தார்
புரணமெய்ஞ் ஞானப் பொலிவா சரணம்
உயிர்க்குயி ராநீ யொளிருண்மை யோர்ந்தார்
உயிரினு நின்னை யுவப்பார் சரணம்
மோகத்தி னின்று முளைத்தவா முப்புடி
மோகத் தழிவான் முடிவாஞ் சரணம்
அகந்தைக் கிழங்கை யகழ்ந்தபின் முன்பு
நிகழ்ந்தவவ் வெல்லா நிலையா சரணம்
உறுதிசே ருண்மை யுணர்ச்சியா லன்றிப்
பிறவிசேர் துன்பம் பிரியா சரணம்
வெருவா லாலே விளைவதை யன்றிப்
பருவா னுண்மையிற் பாழ்காண் சரணம்
அறிவுண்மை நன்றாய்ந் தடங்கினா ரின்பம்
நிறைவுண்மை யென்றென்று நீங்கார் சரணம்

## சரண மாலை

உடையாய் சரண முவந்தாள் சரணம்
கடையேன் சரணங் கடவுள் சரணம்

அனாதி சரண மனந்தா சரணம்
மனாதி சரண மனாந்தா சரணம்
தந்தாய் சரணந் தலைவா சரணமென்
சொந்த சொரூபத் துணைவா சரணம்
தூயா சரணமெய்த் தோழா சரணநற்
றாயா சரணநின் சேயேன் சரணம்
ஒருத்தா சரண முரித்தா வெனக்குத்
திருத்தமாத் தோன்றுந் தெரிவா சரணம்
வெளியா சரணங் கரியா சரணம்
ஒளியா வுளத்து ளுளவா சரணம்
எளியா சரண மரியா சரணம்
தெளிவா திறந்த வெளியா சரணம்
அருளா சரண மறிவா சரணம்
பொருளா சரணமென் போகா சரணம்
பிறவாய் சரணம் பிறப்பாய் சரணம்
துறவாய் சரணந் துறப்பாய் சரணம்
பிறவாய் பிறப்பாய் பிறங்குமெய்ஞ் ஞானத்
துறவா மகந்தைத் துறவா சரணம்
பகலா சரணம் பகவா சரணம்
புகலா சரணம் பொறையா சரணம்

## சரணாகதி

உதியா வொடுங்கா வுறுதியா முண்மைப்
பதியா முனது பதத்துணை யேயலாற்
றேவர்க்கு மல்லவான் சித்தர்க்கு மல்லமற்
றியாவர்க்குந் தஞ்ச மிலைகாண் சரணம்
அருளாலே யன்றி யதீதமா முண்மைப்
பொருளாம் பதத்தையார் புக்கார் சரணம்

வாய்ந்தவா றெல்லாம் வழுத்துவே னல்லன்மற்
றுய்ந்தவாற் றாலே யறைந்தேன் சரணம்
பெரிதுங் குழறிப் பிதற்றிய தெல்லாம்
அரிதுரை யாமகிழ்ந் தாண்டாய் சரணம்
ஆவலா யிவ்வோ ரகவ லிசைப்பித்த
தேவரா யன்மகிழ் தேவா சரணம்
எனையாது குற்ற மியற்றினு மென்றும்
முனியாத சாந்த முனிவா சரணம்
எனையாண்ட நின்ற னியல்வாழி யென்றன்
மனமார்ந்த நன்றியும் வாழி சரணம்
வாழிய நின்னருள் வைப்பகத் தென்புரை
ஏழையர் பங்குறை யெந்தாய் சரணம்
மறவியின் மோக மனத்தான் மடுத்த
பிறவியைப் பற்றிப் பிரிவறத் தான்றொடர்
மாதுக்க நீக்க மனங்கொண்ட தீவிர
சாதுக் களுக்கோர் சரணிய மான
சரணும் புயநான் சரணம்
சரணமென் றென்றுஞ் சரணநா யேனே.

திருச்சிற்றம்பலம்

---

## திருவகவற் கருத்து

(குறள் வெண்பா)

**சரணத் திருவகவல் சாற்றுவது செம்மாண்**
**பிரணவத்தாற் பேசும் பொருள்.**

---

# ௨. சரணத் திருவெண்பா

## முகம்புகுதல்

(நேரிசை வெண்பா)

திருச்சிற்றம்பலம்

மலைமேல் விளக்கா வயங்குமெய்ஞ் ஞான
நிலைமே வியரமண நீதா—தலைமேல்
அடிதாங்கித் தன்னைநன் காராதிக் கின்றார்
குடிதாங்குங் கோமான் சரண். ௧

நந்துணர் வோய்ந்தொழிய நாணா ரெனத்தனது
மந்தண வுண்மை வழிகாட்டும்—அந்தண
நம்பா நமோநமமெய்ஞ் ஞான வருட்சுடராம்
தம்பா வடியேன் சரண். ௨

விமோசன தெய்வ விசுத்தமொழி மீக்கூர்
நமோராம ணாயவென நம்பி—அமோகமா
வாக்கால் வழுத்தி வணங்குமென் மத்தகத்தே
தாக்காயுன் பாதஞ் சரண். ௩

உதாரசஞ் சீவியா மோங்கால் வடித்த
சுதாரசஞ்செய் தோளா சுநீதா—மதாலசா
அச்சுதா னந்தா வதிரூப சௌந்தரியா
சச்சிதா னந்தா சரண். ௪

**ப**ரம்பாய வுள்ளத்துப் பார்வைகூர் ஞான
வரம்பாய மோனவருள் வள்ளால்—நரன்போல்
இமைப்பாய் முகக்க ணிமையா யகக்கண்
தமப்பா தமியேன் சரண். ௫

**க**ற்றதும் போதுநான் கேட்டதும் போதுமினிக்
கற்றபடி நிற்கக் கடவனன்றிச்—சொற்றதும்
கேட்பார்க்குப் போதுமெனக் கேமக் கிளரொளிசேர்
தாட்பார்க்கு நெஞ்சன் சரண். ௬

**மா**ண்பாக் கழலடைந்து வாழத்தா நோற்றாரே
பூண்பாக் கியத்தாற் பொலிவுறுவார்—காண்பார்க்கு
மாரகரூ பத்தாய் மனத்தா னினைப்பார்க்குத்
தாரகநா மத்தாய் சரண். ௭

**த**னயரொடு தாரந் தமனியம் பூமி
அனையபிற வாசை யகற்றி—உனையே
உரிதாக வுற்றாரை யோம்பு முதார
சரிதா தமியேன் சரண். ௮

**அ**ண்ணலா முன்னை யடைந்தார்க்கு வெஞ்சுரத்து
மண்ணிலே கற்பகமா மன்னுவாய்—தண்ணெனவே
எண்ணிலாத் தாபத் தெறிபட்ட மன்னுயிர்க்குத்
தண்ணிலா வாவாய் சரண். ௯

**சா**தனைமற் றொன்றின்றித் தன்னடியே சான்றவுயர்
சாதனையா வாற்றுவார் தம்மகத்து—வாதனையின்
தொல்லியல்பா நீளத் தொடர்ந்துநிகழ் மாமோகச்
சல்லியந் தீர்ப்பாய் சரண். ௰

மன்னுழப்போய் வாவென்று வன்கால காலனும்
தன்னழைப்பைக் கேட்டுத் தயங்காது—தன்னிழப்புக்
குட்கா துளத்துன்னை யுற்றூர்க் கெதனுலும்
தட்காத வாழ்வாய் சரண். கக

அகந்தை முனைப்பை யறக்கடிந்து சிந்தை
முகந்த முடிச்சை விடுப்பாய்—அகந்தையால்
ஏழினிழித் தும்பரைமற் றிம்பரையுந் தன்பரமாத்
தாழினுயர்த் துந்தாள் சரண். கஉ

உளைந்துநை யாதே யுயிர்க்குறுதி நாடி
அளைந்தமெய் யன்ப ரகத்தைத்—தெளிந்த
கருணா ரசத்தாற் களிதுளும்பச் செய்யும்
சரணார விந்தஞ் சரண். கங

உய்யா துயிர்ப்புணர்ச்சி யுள்ளொடுங்க யோகத்துத்
தொய்யா முயற்சிசெய் சோம்பலான்—மெய்யாம்
பரத்தேட்டத் தோரைப் பரிவோடே தான்சஞ்
சரித்தூட்டும் பாதஞ் சரண். கச

## தனித்தலைமை நிலைசாற்றல்

வணங்குந் தலைபடைத்த மற்றையோர் நம்மால்
இணங்குந் தரமல்ல ரென்று—பிணங்கியே
உம்பரா னுமற் றொருபிரா னில்லாமெய்த்
தம்பிராற் சார்ந்தேன் சரண். கரு

சரணுகத் தானினையத் தக்கார் தமக்கும்
சரணமெய்த் தத்துவமாந் தாளாய்—புரணத்
தருணா ருணனுத் தமங்கடிசச் சித்தாஞ்
சரணார விந்தஞ் சரண். கசா

பொங்கும் புரந்தரனூர் போகநுனிப் புற்பனியின்
மங்குவதா கத்தன் மகத்துவத்தே—நங்களுக்
கேமமா வோங்கும்பே ரின்பவடி வானபரந்
தாமமா நின்றாள் சரண். கள

எத்தனையோ சார்புமற் றேனோர்க் குளவேனும்
வித்தகமெய்ஞ் ஞானவருள் வேங்கடவா—மெய்த்தகுண
சாதுக்கட் குன்னையலாற் சார்புவே றின்மைகண்டு
சாதுக் களையாள் சரண். கஅ

ஈவதன் றென்னி னியல்வதன்று நின்னருள்பல்
காவதமோங் கப்பறந்துங் காண்பரிதாத்—தேவர்தம்
கற்பனை சத்தி கடந்தொளிர்மெய்ஞ் ஞானசுகத்
தற்பரா நின்றாள் சரண். ககூ

வாலியமெய்ஞ் ஞான வடிவத்தை மாமறையும்
மாலயனுங் கண்டிலா மாண்புசேர்—ஆலயா
தத்துவங்க ளாலே தரிசிக்க லாகாமெய்த்
தத்துவா நாயேன் சரண். உ0

சாவிடத்தி னின்றுஞ் சரணஞ் சமர்த்தரைமுன்
யாவிடத்து நேடியுங்கண் டெய்தாதேன்—சாவிடத்துச்
சாவுக்குஞ் சாவாத் தழைத்தவருட் சிறப்பதனிற்
றாவிக்கண் டேன்காண் சரண். உக

## சீலச் சிறப்புரைத்தல்

நறுமுறுவின் ஞோர்தொகுதி நாணவே யற்பச்
சிறுமனிசர்க் காற்றுமருட் சீர்மைக்—கறிகுறியாப்
பொங்கராப் பூண்டவருட் பூதா ரமணசிவ
சங்கரா நாயேன் சரண். உஉ

உனைத்தணந் தியாங்க ளுறுதுயரை நீயோர்
தினைத்துணையுந் தேருது தீர்ந்து—புனத்துச்
சிறுஜீ விகளோடு சேர்ந்துவிளை யாடப்
பெறுவதே பெம்மான் சரண். உங

நாயைப் பொருட்படுத்து நாய்க்குப் பதமளித்து
நாயைப் பெருமிதஞ்செய் நாயகா—சீயென்னு
துல்லாச மாகவுவந் தூத்தைநா யோடுஞ்செய்
சல்லாபா நின்றாள் சரண். உச

தீன தயாளுவாச் சீர்த்தவருட் செல்வாவென்
ஈனதையே நீகாத்தற் கேதுவாம்—ஏனைத்
தகவுளார்க் கன்னார் தகவே யமையும்
தகவிலா நாயேன் சரண். உரு

அடைக்கலங் காக்கு மறவோ யறிவாற்
கடைக்குலநா யென்றே கடியா—திடைக்கலமா
அந்தரம்போ காதிவ் வடியேனைக் காத்தருள்செய்
சந்ததநின் றாளே சரண். உசா

## அருட்செல்வத் திறன்

வான்கற் பகத்துக்கவ் வண்மை வழங்கியமாத்
தேங்கற் பகமாந் திரவியமே—பாங்கமரும்
கேளா வுனைப்படைத்தேன் கேளா தருள்பதுமத்
தாளாகண் ணாளா சரண். உஎ

பொருட்செல்வம் பூரியார் கண்ணும் பொருந்தி
மருட்செல்வ மாகவே மங்க—அருட்செல்வம்
மிக்கா யடியேனை வேறுகொண் டாண்டபெருந்
தக்காய் தமியேன் சரண். உஅ

என்னையான் கைம்மா றியற்றுவதுன் சேவடிக்கென்
றின்னையா னேங்கி யிணைகின்றேன்—இன்றுதாம்
சிந்தா குலந்தீர் திருவருட்செல் வந்திகழத்
தந்தாய்க்கு நாயேன் சரண். உகூ

அடையத் தருவதுன்று ளன்றிவே றில்லை
உடைமை யதுவே யுறுதி—உடைய
அனைத்துப் பொருள்களுநில் லாதொழிய யானுன்
றனைத்தவிர்த்தொன் றில்லேன் சரண். ௩0

அனந்தமாஞ் செம்பதத்தை யன்றிமற் றொன்றை
நினைந்தறியா மெய்யன்பர் நெஞ்சில்—முனைந்தருள்செய்
வண்டா மரைநிதியா வைகி வளமனைத்தும்
தண்டா தளிப்பாய் சரண். ௩க

முயலை முடங்கி முழுமுதலா முன்னால்
உயலை யுறுதியாக் கொண்டோர்—அயலை
விரும்பாதா ராக விழுப்பொருளாந் தன்னைத்
தரும்பாதா நாயேன் சரண். ௩உ

ஆர்வலரை நோக்கி யடிகளுந்தா மன்பருவந்
தீவதனிற் றம்வாழ் வெனலாலே—மேவருமெய்
யார்வமே லிட்ட வடியார்க் கருள்வழங்கு
சார்வபூ மத்தாள் சரண். ௩௩

## அடைக்கலம் புகுதல்

பிதிர்ச்சியாங் கிற்றுப் பிறையா யுலகத்
ததிர்ச்சியான் மாழ்கி யலந்தேன்—எதிர்ச்சிக்
கதிரா வடிகளா மையா ரமணச்
சதிராளா நாயேன் சரண். ௩௪

சாலமதி கெட்டுத் தடுமாறி மெய்ஞ்ஞான
சீலமெது வென்றுய்ந்து தேறுதே—போலி
மதாசார மாற்றி மயங்கினேன் ஞான
சதாசாரா நின்றுள் சரண். ௩௫

சாதன்மா வொன்றுநான் சாதிக்க நானதனுக்
கேதலறு மென்றேநன் கெண்ணுதி—நீத
விரதமா நின்னடியே மேவினேன் மிக்க
சாதமிது தேறுய் சரண். ௩௬

குறிப்பட்டு நாடியுளங் கூடே னுலகப்
பொறிப்பட்டுப் பொல்லாப் பொறியேன்—வெறிப்பட்டேன்
அங்கோதாகா வன்றே லழிவே னுபநிடதச்
சந்தோகா நாயேன் சரண். ௩௭

சுகந்தமணத் தொங்கல்சேர் தோளா விரண்டற்
றுகந்தணையக் கற்ற வுளவா—அகந்தைச்
சுமையாற்ற மாட்டேன்காண் சுத்தசச் சித்தாம்
தமியா தமியேன் சரண். ௩௮

நம்பித் தனையடைந்த நாயேனோர் கும்பத்துட்
பம்பிப் பதைக்கப் பவனைக்—கும்பித்
துழைப்பதற்கு நானு ருடையாய்பே ரின்பம்
தழைப்பதற்கு நீதான் சரண். ௩௯

உண்ணவோ வன்றி யுடுக்கவோ வென்னினிதா
நண்ணினே னென்று நடக்குமனம்—அண்ணலுனை
உன்னவோ வன்றி யுரைக்கவோ வென்னினடை
பின்னடையும் பேணுய் சரண். ௪0

உன்னை யடைந்தோர்க் கொருகுறையு மில்லையென
முன்னை யடியார் மொழிந்ததுகேட்—டின்னினியே
உன்னையடைந் துய்யு முறுதியொடு நெஞ்சாலுன்
றன்னை யடைந்தேன் சரண். சக

மெய்தக்க ஞான விசுத்தத் திருவாளா
உய்திக்கு நானு முனைத்தொழுதேன்—தெய்வத்
தொழும்பாளர் தம்முடிமேற் றேய்தலாற் கன்றித்
தழும்பான நின்றாள் சரண். சஉ

தெருள்சேர்ந்த ஞானத் திருக்கடைக்கண் ணோக்கால்
இருள்சேர்ந்த வென்னை யிலக்கி—மருள்சேர்ந்த
வெம்பந்த நீங்க வினையேற் கருட்பாத
சம்பந்த நல்காய் சரண். சங

மூத்தியுரு வாநின் முகங்காண மோகித்து
நித்தியமும் பாவித்து நெஞ்சழிந்தேன்—பத்தி
யுருக்கத்துக் கெட்டுவா யூக்குமகங் காரத்
தருக்கத்துக் கெட்டாய் சரண். சச

சுகவா ரிதியின் சொருபா வழகு
முகவா வமுத மொழியா—பகவா
அடிக்கீ ழுறைந்துன் னடிக்கேவல் செய்யத்
தடுக்கா தருள்வாய் சரண். சரு

குஞ்சிமே லஞ்சலிக்கை கூப்பித் தொழுதுரைக்கேன்
செஞ்செவே யாண்ட சிவரமணா—நெஞ்சமிக
அஞ்சினேன் மாயவுரு காரவா ரங்கண்டு
தஞ்சனேன் றாட்கே சரண். சசு

அடியார்க் கெளியாயென் றன்றோர்கொண் டாடும்
படியாற் குறுகினேன் பாதம்—அடியார்க்குக்
கங்குகரை யில்லாக் கடல்போற் கருணைக்குத்
தங்குதடை யில்லாய் சரண். ௪௭

தக்கவருக் கொன்றைத் தகவுபடத் தான்கொடுப்பின்
மிக்கதுருச் சூசியும்பொன் மேருவாம்—தொக்கவர்தம்
சித்தஞ் சிவமாக்குஞ் செல்வா வுனக்கென்னைத்
தத்தஞ்செய் தேன்காண் சரண். ௪௮

தெருவா யலைந்த சிறுநாயை மிக்க
குருவாக நின்று குறிக்கொண்—டருளாலே
வக்கணையா லாண்டநின் மாணடிக்கு நான்றானே
தக்கணையா கின்றேன் சரண். ௪௯

நானுனக்கென் றன்னையற நல்கினே னாயினுமந்
நானதைப்பின் னார்க்கு நவில்கலேன்—மானமெணித்
திக்காரஞ் செய்யாமற் செம்மைசேர் நாகரிகா
சற்காரஞ் செய்வாய் சரண். ௫௦

குறிக்கொளா நின்றுன் குரைகழல்சேர்ந் தன்புன்
முறுவற்கா ளாக முகஞ்செய்—தெறிக்கும்
அருக்கவெனைப் பேய்போ லலைக்கு மகந்தைத்
தருக்கறநன் காள்வாய் சரண். ௫௧

குளத்துநோக் கத்தாய் குணத்துமே தக்காய்
களத்துநீ லத்தாய் கடத்தாய்—உளந்து
நடங்காண வேட்டபுன் னாயேற்குன் பாதத்
தடங்காண நல்காய் சரண். ௫௨

சில்லைக் கடாப்போலச் சிறியெனைக் கொல்லவரும்
தொல்லைக் குடிலையிறத் தூக்காய்கால்—தில்லைக்கண்
மோடிமா காளிதன் மூர்க்கமற வூர்த்துவமா
ஆடி யடர்த்தாய் சரண். ருங

கல்லாத மூடமனக் கற்பனையின் கூட்டுறவாற்
பொல்லா மதியேன் புலம்புவேன்—புல்லுமனக்
கோளறவிட் டென்னைக் குலைகற் பனைகூடாத்
தாளுறவைத் தந்தாள் சரண். ருச

நன்னலத்த நின்னருளை நாடுவதல் லாதுநான்
பொன்னொளித்தம் பாபுறத்துப் போதுகிலேன்—என்னு
தங்காதங் கந்தீர் சழக்கு மனத்தொடுநான் [ளத்துத்
சங்காதங் கொள்ளேன் சரண். ருரு

என்னு ருயிருக் கிசைந்தபே ரின்பாவோ
கொன்னேயென் வாழ்க்கை குலைந்தறவே—நின்னால்
அவலமாக் கெட்டழிந் தானுநான் மற்றுச்
சபலமுறேன் கண்டாய் சரண். ருசு

மறவியால் வந்து மடுத்த வகந்தைப்
பிறவியாற் பெற்றசுகம் போதும்—பிறவியார்
சோகந் தவிர்ப்பாய் சொருபசுக வேட்கையாம்
தாகந் தணிப்பாய் சரண். ருஎ

இன்பே வடிவா யிருந்தொளிர்வா யேழ்பிறவித்
துன்பேயம் பாகத் தொலைப்புண்டு—முன்பே
மிகப்புண்ணு நெஞ்ச மெலிந்தேனை மேலும்
தகர்ப்புண்ணு தாளாய் சரண். ருஅ

**பி**திர்போல் விளங்கப் பெருமையாற் பேதுற்
றதின்மேல் விதியெனுந்தெய் வத்தை—மதியால்
நிருமித்து நானென் னினைவா லதுசெய்
தருமத்துட் பட்டேன் சரண். ௫௯

**அ**ருளாலே தன்னைநன் காராய்ந் தடங்கும்
தெருளாய மோனத் திறத்தால்—மருளாலே
கப்புமகங் காரங் கழிவளவு நானதனிற்
றப்பரிதென் றோர்ந்தேன் சரண். ௬௦

**சே**யான நாயே னகந்தைத் திறத்தானற்
றூயான நின்னருட்கை தப்பினேன்—மாயாநின்
சூழ்ச்சியா லென்னையினிச் சோதியா தின்னேநீ
தாழ்ச்சியற வாள்வாய் சரண். ௬௧

**இ**ருள்சே ரிருவினையா லெற்றுண்ட நாயேன்
அருளாசை யாலே யலந்தேன்—அருளாளா
மற்றுக் களைகணிலேன் மாணடியே நம்பினேன்
சற்றுக்கண் ணோக்காய் சரண். ௬௨

**வா**னே நிலனே மதியே கதிரேமற்
றியானே யெலாமா விருந்தொளிர்சீர்—மானீயா
ஏனோதா னோவென் றிராதேநீ யென்னுளத்துத்
தானேதா னாவாய் சரண். ௬௩

**ஜா**தியால் வேதியத் தாதைதனைத் தாளிரண்டும்
சேதியா நின்ற திருத்தொண்டன்—கோதிலாச்
சண்டிக் கருளியவுத் தண்டீ கழல்சார்ந்த
சண்டிக் கருளாய் சரண். ௬௪

உறுதியா தேனுமெனக் குண்டே லதனை
அறுதியா நீசொற் றருள்வாய்—வறிதியான்
சோம்பியா வொன்றுமெணத் தோன்றாது சிந்தையறச்
சாம்பினேன் கண்டாய் சரண். கரு

சூத்தவியன் ஞான சொரூபா வகந்தையறச்
செத்தவிய வோர்தந் திரமுரையாய்—கர்த்தவியப்
புந்திக்க ணின்று புலம்பினேன் போதநிலை
சந்திக்க நின்றாள் சரண். சுசு

வலியோங் கருண்ஞான வல்லாளா நாயேன்
கலியாங் கிலியாற் குலைந்தேன்—கலியேங்க
நன்றணைவா யென்றனைமெய்ஞ் ஞானமிலாப் பேதையேன்
றன்றுணைவா நின்றாள் சரண். சுஎ

உனக்கும்பெப் பேயுங்க ளப்பனுக்கும் பெப்பே
எனக்கும்ப லோடேனையே மாற்றா—தனைக்கும்பே
ரன்னையா மேலோங் கருண்மலையே யாதரித்தென்
றன்னையாள் வாய்நீ சரண். சுஅ

அன்னியனு னல்லே னடியே னெழுமையுநீ
என்னியமா னெந்தை யிறைராமணா—நன்னயமார்
தள்ளா யுனைப்பிரமா தத்தாற் பிழைத்தாலும்
தள்ளா தெனையாள் சரண். சுகூ

பிள்ளை வளமே பெருவளமாப் பேரறிஞர்
உள்ளிக்கொண் டாட லுணர்ந்துவந்தேன்—உள்ளத்
தவிசில் வரிசை சகலமுஞ் சாரத்
தவழ்செல்வப் பிள்ளாய் சரண். எ0

## ஆட்கொண்ட சம்பிரமம் இயம்பல்

தஞ்சமென நம்பியுனைச் சார்ந்தோரைத் தப்பாமே
அஞ்சலென நீகாத் தருளுதி—நெஞ்சமுற
நம்பிரம ணுவுன்னை நானடைந்த தாலிதய
சம்பிரம முற்றேன் சரண். எக

இகம்பர மெல்லா மெனக்குநீ தாணு
முகம்புரிந் தாண்டகுரு மூர்த்தி—அகம்புறம்
கீழ்மேலற் றெங்குங் கிளர்பரிதீ காரவிச்சைத்
தாழ்மையறப் பாழ்செய் சரண். எஉ

ஆற்றப் பெரிய வருந்தவரும் பற்பலநாள்
ஆற்றிப் பெறாத வரும்பயனை—நோற்றற்கண்
ஆற்றவெருள் கொண்ட வடியேன் சிலநாளிற்
றேற்றவருள் செய்தாய் சரண். எங

உயிருக் குயிரா வுணர்வுக் குணர்வாத்
துயரைக் களையுந் துணைவா—பயிர்க்கு
மழைப்பெயல்போ லென்னுயிர்க்கு மங்கு முயிர்ப்புத்
தழைப்பவரு மேகா சரண். எச

கதிக்குவழி காட்டுங் கமலபா தாநின்
அதர்க்குவிழி வைத்தே னடியேன்—புதர்க்கு
நிலைப்பெயலா நின்றநீ யின்றே யெனக்குத்
தலைப்பெயலா வந்தாய் சரண். எரு

செவ்வியமெய்ஞ் ஞானத் தெளிவற் றவிச்சையரா
வவ்வமதி முற்ற மயங்கியே—இவ்வுலகத்
தேன்றோன்றி னேனென் றிரங்கா தெனைக்காத்த
தான்றோன்றி யம்மான் சரண். எசு

ஏமாந்த சோணகிரி யென்றுன்னை யேத்துவார்
ஏமாந் தொழியவவ ரின்னுயிரைத்—தான்மாந்திக்
கொக்கரிக்குங் கோமான் குதூகலமா வென்னைநனி
சற்கரிக்கும் பெம்மான் சரண். எஎ

நியதிப் படியே நிகழ்வதன்றி நெஞ்சத்
தயர்தியுற நானே னலேவன்—செயிர்தீர்
கரியாகக் கண்டு களித்தெளிதா னொய்ய
சருகாச் சரிப்பேன் சரண். எஅ

வெறும்போது போக்கி விளையாடி னேனை
இறும்பூதா வாண்ட விறைவா—நறும்பூம்
பலிப்பெய்துன் பாதம் பரவுகின் றேனைத்
தலைப்பெய்து காவாய் சரண். எகூ

அந்தோ வடியே னகந்தை யிருந்தவா
சிந்தை யிறக்கத் திருவருட்சீர்—தந்தாய்க்
கிலையாலென் போலொருவ ரென்றிறுமாப் பாலே
தலையா னடந்தேன் சரண். அ0

பெண்மணியா மம்மணியாற் பேணுமணி விஞ்சைசேர்
விண்மணியா வென்னுள் விளங்குமணி—கண்மணியாம்
துங்கமணி யானசுயஞ் சோதிமணி சாம்புநதத்
தங்கமணி யம்மான் சரண். அக

## தலைவனைப் போற்றல்

### தலைவி கூற்று

#### களவு

கூடை யொருத்தி கடைத்தேற வெண்ணி
அடியடைந்து நின்றக்கா லையா—கொடைவள்ள
லாகவந்தாய் போலே யடிச்சியே னுகைத்துச்
சாய்கவர்ந்தா யந்தோ சரண். ௮௨

கூதியான செம்பொற் கழலாய் கழல
மதியாக மங்கி யிளைக்க—நிதியான
சங்கமெனக் காரிகைகைச் சங்கங் கவர்ந்தாயுன்
சங்கமெனக் கீயாய் சரண். ௮௩

தூச்சத் தொழுத்தை துணிந்தெங்ஙன் சொல்லுகேன்
உச்சத் தவர்க்குநனி யுச்சத்தாய்—சச்சித்தாம்
துப்பா வொளிர்நின் சொருபாநு பூதியுறத்
தப்பா தருள்வாய் சரண். ௮௪

பக்குவம்பார்த் துண்ணப் படுவதன்றித் தீங்கனிதன்
பக்குவம்பா ணித்தாற் பழுதுபடும்—நக்குக்
குறுவாது செய்துநீ கோகுசெய் யாதே
தறுவா யிதுகாண் சரண். ௮௫

மூந்தியர்தா முன்னை முயங்கித் திளைக்கநான்
பிந்தியதா லந்தோ பிழைப்பட்டேன்—சிந்தைப்
பொருமலற வென்னையருட் பூங்கண்ணாற் காணாய்
தரும குணாளா சரண். ௮௬

கருவே ரறக்காணுங் கண்ணே ரமண
குருவே திருவருட் குன்றே—இருவேமும்
தோணேக்க மாடத் துலங்கும் பரசொருபத்
தாணேக்கந் தாராய் சரண். அஎ

யாமமுங்கண் கொட்டா திடைவிடா தெண்ணியெண்ணி
யாமயங்கி நின்று விறக்கின்றேம்—காமனும்வெட்
காணழகா வாருயிருக் காரமுதா வெங்களைநின்
தாணிழல்வாய்ச் சேர்ப்பாய் சரண். அஅ

வல்லாங்கு மற்றூர்போன் மாணடிக்கீழ் வாழ்வகையொன்
றில்லாங் கெனக்கொழிந்த தென்றேதான்—பொல்லாங்கு
செய்யும் பொறிப்புணர்ப்பாற் சிந்தைத் தெருமரல்சேர்
தையலைநீ தேற்றாய் சரண். அகூ

ஐவர் மனமொன்றி யாணழக னுமுனைச்சேர்ந்
துய்வமென நாடி யுளப்பட்டோம்—தெய்வமண
மந்தார மாலையணி மார்பா வடியோங்கள்
சந்தாபந் தீர்ப்பாய் சரண். கூ0

நீயெனக் காண்டவனு நிற்கவென் பக்கத்தே
தாயெனக் கேன்றந்தை தானெனக்கேன்—நாயெனைக்கண்
விந்தையா லாண்ட விநோதரம ணுநீயே
தந்தைதா யாவாய் சரண். கூக

கற்பு

சூழற்றி யெறிந்தமணத் தொங்கல் சுழன்றுன்
எழிற்றிருமார் பத்தை யிலக்கச்—செழித்த
பதியா முனக்கே பதிவிரதம் பூண்டு
சதியானேன் காப்பாய் சரண். கூ௨

திவலையுநம் பிக்கையறத் தீவினைவாய்ப் பட்டுக்
கவலையுற நெஞ்சங் கலங்கி—அவலமா
மங்கிக் கிடந்தேன் மகிழ்துலங்கத் தொட்டமணத்
தங்கக்கை யம்மான் சரண். ௧௩

மரணமே மாண்பா மதித்தேன் முடிவாத்
தருணமிது காவாய் தளரா—தருணமலைச்
சிங்கா தெளிந்தவருட் செல்வா சிவசொருபத்
துங்காவென் கொண்கா சரண். ௧௪

அருத்தித் தடைந்த வடிச்சியா மென்னைத்
திருத்திப் பணிகொண்ட செல்வா—உருத்தக்க
மார்பா மதவலிசேர் மொய்ம்பா வபலைக்குச்
சார்பாக நிற்பாய் சரண். ௧௫

கழுத்திற் றொடுத்தமாங் கல்லியநா ணென்றும்
பிழைத்துப் பெருகாத பேற்றேன்—பழுத்தொளிரும்
பாசுபதா தாலியைப் பாலிக்கும் வேலியாம்
சாசுவதா நின்றாள் சரண். ௧௬

### செவிலி கூற்று

உரைகடந்த வுன்னை யுடையோனாப் பேணும்
கரைகடந்த காதல்சேர் கன்னி—வரைகடந்த
தோளுக் கிசைந்தபணைத் தோளிநின் றாழியாத்
தாளுக் குரியாள் சரண். ௧௭

பவனியிலே நின்சொருபம் பார்த்தாள் பழுத்த
தவனியெனா நின்சொருபஞ் சார்ந்தாள்—யவனியிவள்
சொன்மறந்து மெய்ம்மறந்து சூழலையுந் தான்மறந்து
தன்மறந்து நின்றாள் சரண். ௧௮

தொல்லைப்பல் லூரார் தொழுநீ நடமாடும்
தில்லைப்பொன் னம்பலத்துட் சென்றுபுக்—கொல்லை
மடன்மாவூர்ந் தாயினுநின் மார்பந்தான் றோய்வாள்
நடமாடு நாடாய் சரண். ௯௯

பண்ணுளாய் தேவாரப் பாட்டுளாய் பாவையாள்
கண்ணுளா யுள்ளக் கருத்துளாய்—எண்ணுவாள்
வெண்ணிலா வாலே மெலிவா ளுயிர்தழைப்பத்
தண்ணளிநீ செய்வாய் சரண். ௧௦௦

நலத்தா லுயர்ந்தகுண நாகரிகா வுன்பின்
வலத்தாற் றனையளிக்கும் வள்ளால்—குலத்தாலும்
கோலத்தோ டோங்குங் குணத்தாலுங் கைப்பற்றச்
சாலத் தகுவாள் சரண். ௧௦௧

சுபரஞ் சனமாஞ் சொருபா வடியேன்
அபரஞ்சி தன்னை யறியாய்—நவரங்
கனிரசமா வுன்னடியைக் காதலித்தாள் கண்ணாற்
றனியளைநீ காணாய் சரண். ௧௦௨

நீச்சிலடங் காது நிறைந்தசுக வெள்ளத்தை
வாச்சியம்போ லெண்ணி வழுத்துவாள்—பேச்சிலே
ஏறுமா றாக விசைப்பாள் சரிதையறத்
தாறுமா றாவாள் சரண். ௧௦௩

பிச்சனாத் தோன்றினுமெய் விச்சனா முன்னையறப்
பிச்சனாப் பேதுறலாற் பேதையாய்—நச்சியவிப்
பிச்சிக்கே நின்மார்பிற் பிச்சியுரித் தாமதனைப்
பிச்சியிவட் குத்தா சரண். ௧௦௪

**ய** வனியுனக் கேற்ற ரமணியென் பாவை
டவனியுனேக் கண்டு பதைத்தாள்—சிவரமணு
ஆராய்நீ யாரா யணங்கணங்கு கொன்றைப்பூந்
தாராய்நீ தாராய் சரண். ௧0௫

## நிறை வுறுத்தல்

**பா** விற் குரியவருட் பாதார விந்தாவென்
ஆவிக்கு வாய்த்த வருந்தலைவா—பூவைக்கும்
பொற்பதத்தே கூசாமற் புல்வைத்துப்போற்றியமாத்
தப்பிதத்தேன் கண்டாய் சரண். ௧0௬

**அ** ண்ணு மலையா வடியே னபக்குவத்தை
எண்ணுமலையா வினிதாண்டாய்—கண்ணு
ரமுதக் கடலா வகங்குளிரத் தேரும்
தமிழப் பெருமாள் சரண். ௧0௭

**அ** ரணு வதுநின் னருட்பதமே யென்று
சரணு கதியாகச் சார்ந்தேன்—புரண
சரணு கதிதன்ம சற்குருவாந் தெய்வச்
சரணர விந்தஞ் சரண். ௧0௮

திருச்சிற்றம்பலம்

—※—

# ௩. புனர்வசு வண்ணம்

(கலிநிலைத்துறை)

† பண் : குறிஞ்சி (சுருட்டி)

திருச்சிற்றம்பலம்

தண்ணு னுனது கதிர்முக நாங்கள் காணப்பெற்
றண்ணல் கண்ணு லாம்பய ஞர்ந்தன மென்பாரால்
எண்ணு நின்று ரிதயத் தொளிரும் ரமணப்பே
ரண்ணு மலையான் புனர்வசு நன்ஞ ளதுவண்ணம். ௧

இதாவொரு கோடி யினர்போ லொளிரும் ரமணப்பே
ருதார குணன னுவப்பது நோக்கி யுவப்பாரால்
சுதாவடி வான சொரூபா னந்த சுயஞ்சோதி
யதாவெமை யாண்டான் புனர்வசு நன்ஞ ளதுவண்ணம். ௨

சூலவுந் தொண்டர் கூடித் தம்மிற் கொண்டாடும்
தலைவன் பேச்சே தம்முண வாகத் தழைப்பாரால்
இலகும் புகழா லெண்டிசை போர்த்த ரமணன்பேச்
சலகில் களிப்பாம் புனர்வசு நன்ஞ ளதுவண்ணம். ௩

பொருளின் வண்ணம் புகழின் வண்ணம் பொலிவண்ணம்
தெருளின் வண்ணந் திருவின் வண்ணந் திகழ்வண்ணம்
இருளின் வண்ண மிலையாம் வண்ணம் ரமணன்கூ
ரருளின் வண்ணம் புனர்வசு நன்ஞ ளதுவண்ணம். ௪

மீட்சின் வண்ணம் விஞ்சையின் வண்ணம் வீட்டின்பக்
காட்சியின் வண்ணங் கேள்வியின் வண்ணங் கடவுண்மாப்
பூட்சியின் வண்ணம் பூரண வண்ணம் பொற்ருளுக்
காட்சியின் வண்ணம் புனர்வசு நன்ஞ ளதுவண்ணம். ௫

† முத்து விதானம் - என்னும் தேவாரப் பண்.

**தே**ர்கலை யெல்லாந் தேறினுஞ் சிந்தை தெளியாது
நீர்கன ஞான நிலைபெற வேட்ட நெஞ்சத்தீர்
சார்கதி காட்டுஞ் சதாசிவ மூர்த்தி ஜயந்திச்சீர்
மார்கழி மாதப் புனர்வசு நன்னா ளதுவண்ணம். ௬

**ஆ**தர மிக்க வடிய ரகக்கா ரகன்றோட
மூதுரை யாலே முகவுரை யோதி மோனஞ்சேர்
போதனை யாலநு பூதி புணர்க்கும் புலவோன்ஞா
னாதவ மெய்யன் புனர்வசு நன்னா ளதுவண்ணம். ௭

**வி**தானங் கட்டித் தொங்கல் விட்டு விநோதஞ்சேர்
பதாகை தூக்கிப் பற்பல் சிறப்புப் பாரிப்பார்
எதாகிலு மோர்குற் றேவ லியற்றப் பெருமோவென்
றதேநினை வாவர் புனர்வசு நன்னா ளதுவண்ணம். ௮

**மா**தவர் வேதியர் மந்திர மோதி வழுத்துவார்
கோதையர் தாந்தங் கொழுந ரொடும்பின் குறுகுவார்
பேதைய ரானோர் மேதைய ராகப் பிறங்குவார்
ஆதர நாஞ்செய் புனர்வசு நன்னா ளதுவண்ணம். ௯

**தா**ழிசை வண்ணஞ் சந்த விருத்தஞ் சாற்றுவார்
ஏழிசை வாண ரியாழொடு வீணையி லேற்றுவார்
தோழந் தோகையர் பூப்பலி பொற்சுணந் தூவுவார்
வாழி ரமணன் புனர்வசு நன்னா ளதுவண்ணம். ௧௦

**வாழ்த்து**

**மோ**க மொழிக்கும் முனிவன் றிருவாய் மொழிவாழி
சோக மகற்றுஞ் சுத்தாத் துவிதச் சுடர்வாழி
ஏக சொரூப ரமணன் கருணை யியல்வாழி
காக முறவு கலந்தாற் போலுங் கணம்வாழி.

திருச்சிற்றம்பலம்

# ச. பிரார்த்தனை மாலை

(ஆசிரிய விருத்தம்)

† பண் : பஞ்சமம் (ஆகிரி)

திருச்சிற்றம்பலம்

**மோ**ழைமை சேர்முழு மூர்க்கப் பதடியா
மென்னை முகந்தருளால்
ஏழைமை யாமென் னிருட்குலப் பாழைமுற்
றெற்றுங் குருரமணன்
ஏழுல கத்தினு மின்னருட் சோதி
யிலங்குஞ் சுடர்க்கழலின்
தோழமை யென்னுளந் தொன்றுதொட் டுள்ளதென்
றென்றுந் தொடர்ந்திடவே. க

**பெ**ண்ணு ணலியெனும் பேத சுபாவப்
பிழைசே ரகந்தைமதி
நண்ணு ரகத்துமெய்ஞ் ஞான சொரூபமா
நண்ணுங் குருரமணன்
எண்ணு லெழுத்தா லிலக்கப் படாமெய்
யியல்பாற் சுடர்சொருபக்
கண்ணு லடியேன் கருத்தைக் கவர்ந்து
கவளமா வுண்டிடவே. உ

**எ**ண்ணு தனவெண்ணி யேங்க லொழிமி
னிரங்கித் திருவருட்பால்
உண்ணு முலையா லுயிர்த்தொகை முற்றினு
மூட்டுவ ளாயுலகத்

† மன்னுக தில்லை - என்னும் திருப்பல்லாண்டுப் பண்.

தெண்ணான் கறம்வள ரேந்திழைச் செல்வி
யிடம்வளர் தற்பரனும்
அண்ணா மலையா னருட்சத்தி நங்கை
யன்புற வாளுகவே. ௩

பழியொடு பட்டவெம் பாவம் பயிற்றும்
படிற்றுளப் பாதகராம்
இழிசினோந் தம்மை யிலங்கருட் கண்ணா
லிரங்கி யிறைரமணன்
வழிவழி யாளா வலியவந் தாண்ட
வனைகழல் வள்ளலடிக்
குழுவலன் பாலே யெழுமையுந் தொண்டுபட்
டுள்ள முருகுதுமே. ௪

பழைய பரம சிவம்புதி தாகப்
பயின்ற வருள்வடிவம்
குழையத் தழுவிய கோமளச் செல்வி
குலவுஞ் சிவசொருபன்
மழையொத் தழகிய மாமலர்க் கண்ணால்
வறந்தலை வற்கடம்போய்த்
தழைய வுயிர்த்தொகை தங்கும் பதநிழல்
தாப மகற்றிடவே. ௫

கசிபத மோர்ந்தகங் காரக் களங்கக்
கருத்தை யறக்கடிந்து
நிசிபதி யாக நிகழ்ஜீ வனத்தன்
னிஜபர மார்த்தசிவத்

தசிபத வுண்மை யனுபவ மாம்பர
மோனத் தமைதிபெறப்
பசுபதி யாகக்கண் பார்ப்பான் பதவொளி
பாச மகற்றிடவே. ௬

இடிவளர் வெம்படை யாலிவ் வுலகை
யிடர்ப்படுத் துங்கொடியோர்
அடியள வல்லா வறவோரைக் காக்கு
மடல்சே ரருள்விழியாற்
புடிவளர் மாயப் புரட்டா மவிச்சையைப்
போக்குங் குருரமணன்
விடியிள ஞாயிற்றை வென்ற சுடர்க்கழல்
விஞ்சை விளங்கிடவே. ௭

ஏனோதா னேவென் றுதாசீனஞ் செய்யா
தியல்பாங் கருணையினால்
நானேதா னாகப்புன் னாயேனை யாண்ட
நயவன் குருரமணன்
வானேதா னாக வழங்கும் பெருமித
வள்ளன்மை யார்ந்தபதம்
தானேதா னாகத் தழைத்துச் செழித்துப
சாந்தம் பழுத்திடவே. ௮

**ப**ணிவா லடைந்ததன் பத்தரை மேன்மேற்
பணிவித்துத் தன்மயமெய்
யுணர்வா லடிப்படுத் துள்ளமா வுள்ளத்
தொளிருங் குருரமணன்

அணுவாகத் தேய்ந்துதேய்ந் தொன்றாக நின்றொளி
ரத்துவி தப்பதத்தே
அணவாநின் றேங்குமவ் வாத்தனா னன்ம
வனுபவம் பொங்கிடவே. கூ

கலங்குறு நெஞ்சக் கடைவிலங் கிற்புலங்
கண்டதே பண்டமென
மலங்குறு வேனை மயக்கந் தெளித்து
மலரடிக் காண்டதன்றி
விலங்கும் பதந்தொறு மீண்டுமீண் டீர்த்தருள்
வேந்த னருள்விளைவாற்
றுலங்குறு நெஞ்சமே கோயிலாக் கொண்டு
சுபங்கள் விளைத்திடவே. க0

அரிய பரமடி யோங்களுக் காக
வெளிய வருள்வடிவம்
தெரியவந் தாண்டுநஞ் சித்தஞ் சிவமாத்
திகழ்த்துஞ் சிவரமணன்
கரியமா ணிக்கன்செங் கைதொழும் பாத
கனவொளி சேரிதயத்
துரிய வெளிதொல் லுலக மனைத்தையுஞ்
சூழப் பரந்திடவே. கக

திருச்சிற்றம்பலம்

——:o:——

# ரு. திருப்பல்லாண்டு (க)

(கலிநிலைத்துறை)

* பண் : குறிஞ்சி (சுருட்டி)

திருச்சிற்றம்பலம்

பல்லாண் டாதி பராபர னுக்குப் பல்லாண்டு
பல்லாண் டந்தப் பரசொரு பத்தின் படிவத்தாற்
பல்லாண் டெங்களை யாளவந் தானுக்குப் பல்லாண்டு
பல்லாண் டெங்கோ பகவான் ரமணற்குப் பல்லாண்டே.

பல்லாண்டு பாண்டிச் சுழியற் பதியற்குப் பல்லாண்டு
பல்லாண்டு சோணைப் பருப்பதத் தானுக்குப் பல்லாண்டு
பல்லாண் டடியோம் பழமுதல் வைப்பற்குப் பல்லாண்டு
பல்லாண்டு நங்கோ ரமண பகவற்குப் பல்லாண்டே. க

பல்லாண்டு கீளொடு கோவணத் தானுக்குப் பல்லாண்டு
பல்லாண்டு தண்ட கமண்டலத் தானுக்குப் பல்லாண்டு
பல்லாண்டு கைச்சிறு கூறைகொண் டானுக்குப் பல்லாண்டு
பல்லாண்டு நங்கோ ரமண பகவற்குப் பல்லாண்டே. உ

பல்லாண்டு பூதிசிந் தூரத் திலகற்குப் பல்லாண்டு
பல்லாண்டு சத்தி சிவசொரூ பத்தற்குப் பல்லாண்டு
பல்லாண்டு தன்மயப் பார்வையாந் தீர்த்தற்குப் பல்லாண்டு
பல்லாண்டு நங்கோ ரமண பகவற்குப் பல்லாண்டே. ங

* நன்றுடை யானை - என்னும் தேவாரப் பண்.

**ப**ல்லாண்டு கண்ணுற் பரங்காட்டு வானுக்குப் பல்லாண்டு
பல்லாண்டு மோன வுபதே சகனுக்குப் பல்லாண்டு
பல்லாண் டியல்பாய நிட்டா பரனுக்குப் பல்லாண்டு
பல்லாண்டு நங்கோ ரமண பகவற்குப் பல்லாண்டே. ௪

**ப**ல்லாண் டிருடி கணந்தொழும் பாதற்குப் பல்லாண்டு
பல்லாண் டடியனை யுய்யக்கொண் டானுக்குப் பல்லாண்டு
பல்லாண்டென் சிந்தைப் பரிமே லழகற்குப் பல்லாண்டு
பல்லாண்டு நங்கோ ரமண பகவற்குப் பல்லாண்டே. ௫

**ப**ல்லாண்டு மோகப் பரிசழிப் பானுக்குப் பல்லாண்டு
பல்லாண் டகத்தொளிர் சுப்பிர தீபற்குப் பல்லாண்டு
பல்லாண்டு சிந்தா குலந்தவிர்ப் பானுக்குப் பல்லாண்டு
பல்லாண்டு நங்கோ ரமண பகவற்குப் பல்லாண்டே. ௬

**ப**ல்லாண் டகந்தைப் பதைப்பறுப் பானுக்குப் பல்லாண்டு
பல்லாண்டு முன்னிலைச் சுட்டறுப் பானுக்குப் பல்லாண்டு
பல்லாண்டு சாந்திப் பதங்கொடுப் பானுக்குப் பல்லாண்டு
பல்லாண்டு நங்கோ ரமண பகவற்குப் பல்லாண்டே. ௭

**ப**ல்லாண்டு ஜீவபோ தங்கடந் தானுக்குப் பல்லாண்டு
பல்லாண்டு மோனப் பதத்துறை வானுக்குப் பல்லாண்டு
பல்லாண்டு வேதப் பரம்பொரு ளானுக்குப் பல்லாண்டு
பல்லாண்டு நங்கோ ரமண பகவற்குப் பல்லாண்டே. ௮

**ப**ல்லாண் டடியர்பந் தம்பறிப் பானுக்குப் பல்லாண்டு
பல்லாண்டு முத்திப் பதங்கொடுப் பானுக்குப் பல்லாண்டு
பல்லாண் டநாதி மலமுத்த மெய்யற்குப் பல்லாண்டு
பல்லாண்டு நங்கோ ரமண பகவற்குப் பல்லாண்டே. ௯

**ப**ல்லாண் டுபநிட பாரங் கதனுக்குப் பல்லாண்டு
பல்லாண் டொளிர்மேதா தக்ஷிணு மூர்த்திக்குப் பல்லாண்டு
பல்லாண்டு பாவனு தீதசற் பாவற்குப் பல்லாண்டு
பல்லாண்டு நங்கோ ரமண பகவற்குப் பல்லாண்டே. க0

**ப**ல்லாண் டமுதூற்றும் பார்வையாற் காயிரம் பல்லாண்டு
பல்லாண் டமுதியல் வாசகற் காயிரம் பல்லாண்டு
பல்லாண் டமுத சொரூபனுக் காயிரம் பல்லாண்டு
பல்லாண்டு நங்கோ ரமணனுக் காயிரம் பல்லாண்டே. கக

**ப**ல்லாண்டு நங்கோ ரமண பகவற்குப் பல்லாண்டு
பல்லாண்டு நாயைப் பணிகொண்ட தெய்வப் பதத்துக்குப்
பல்லாண்டு பாடுமிப் பாக்கிய மீந்தாற்குப் பல்லாண்டு
பல்லாண்டு பாடுறும் பத்தர் குழாத்துக்குப் பல்லாண்டே.

திருச்சிற்றம்பலம்

—※—

# சு. திருப்பல்லாண்டு (உ)

(ஆசிரிய விருத்தம்)

* பண் : குறிஞ்சி (சுருட்டி)

திருச்சிற்றம்பலம்

பல்லாண் டிதென்னகண் மாயம் பரசொரூ பத்துடே
பல்லாண்டு பந்தமுத் திக்கற் பனைகள் படற்கிற்ப
பல்லாண் டகக்கண் படராந்த மோகப் படலத்தாற்
பல்லாண்டு பாமர மக்கள் படும்பா டலகில்ல
பல்லாண்டு கூரருட் பார்வையன் றிச்சத் திரமின்றிப்
பல்லாண்டு மாயப் படல முரித்துச் சிகிற்சிக்கப்
பல்லாண்டு கைதேர்ந்த கண்வைத் தியனுக்குப் பல்லாண்டு
பல்லாண்டு நங்கோ ரமண பகவற்குப் பல்லாண்டே.

(கலிநிலைத்துறை)

பல்லாண்டு தன்னிலே தானு முளைத்தாற்குப் பல்லாண்டு
பல்லாண்டு தன்னின்மற் றொன்றும் முளையாற்குப் பல்லா
[ண்டு
பல்லாண்டு தானுமற் றொன்றின் முளையாற்குப் பல்லாண்டு
பல்லாண்டு நங்கோ ரமண பகவற்குப் பல்லாண்டே. க

பல்லாண்டு தன்மெய் பராகாய மாகப் பராந்ததனுற்
பல்லாண் டகம்புற வேற்றுமை யில்லாற்குப் பல்லாண்டு
பல்லாண்டு பாகு படாப்பிர மத்துக்குப் பல்லாண்டு
பல்லாண்டு நங்கோ ரமண பகவற்குப் பல்லாண்டே. உ

---

* நன்றுடை யானை - என்னும் தேவாரப் பண்.

பல்லாண் டணுவுக்குந் தானணு வாவாற்குப் பல்லாண்டு
பல்லாண்டு தான்மகத் தின்மகத் தாவாற்குப் பல்லாண்டு
பல்லாண் டணுமகத் தாம்பேத மில்லாற்குப் பல்லாண்டு
பல்லாண்டு நங்கோ ரமண பகவற்குப் பல்லாண்டே. ௩

பல்லாண்டு காலதே யங்கடந் தானுக்குப் பல்லாண்டு
பல்லாண்டு வாக்கு மனங்கடந் தானுக்குப் பல்லாண்டு
பல்லாண்டு தூக்க விழிப்பொழிந் தானுக்குப் பல்லாண்டு
பல்லாண்டு நங்கோ ரமண பகவற்குப் பல்லாண்டே. ௪

பல்லாண் டனந்தநா மத்துநிர் நாமற்குப் பல்லாண்டு
பல்லாண் டனந்தரூ பஞ்சே ரரூபற்குப் பல்லாண்டு
பல்லாண் டனந்த குணநிர்க் குணனுக்குப் பல்லாண்டு
பல்லாண்டு நங்கோ ரமண பகவற்குப் பல்லாண்டே. ௫

பல்லாண் டொருமைக்குப் பாதக மின்றியப் பன்மையுளும்
பல்லாண் டொருதான் பலபோல் விரிந்தாற்குப் பல்லாண்டு
பல்லாண்டு சுத்த சிதாகாச மெய்யற்குப் பல்லாண்டு
பல்லாண்டு நங்கோ ரமண பகவற்குப் பல்லாண்டே. ௬

பல்லாண் டிரண்டற்ற வொன்றி லிரட்டையு முப்புடியும்
பல்லாண்டு தோற்றும் படஜா லிகனுக்குப் பல்லாண்டு
பல்லாண் டவற்றுட் படாத்தற் பரனுக்குப் பல்லாண்டு
பல்லாண்டு நங்கோ ரமண பகவற்குப் பல்லாண்டே. ௭

பல்லாண் டியாதொரு சாதன மின்றியே பாழ்வானிற்
பல்லாண்டு பார்ப்போர் மருளும் படிகற் பனையாலே
பல்லாண்டு தீட்டுறுஞ் சித்திர காரிக்குப் பல்லாண்டு
பல்லாண்டு நங்கோ ரமண பகவற்குப் பல்லாண்டே. ௮

பல்லாண்டு கற்பனா சத்தி பலத்தாற் பலர்காணப்
பல்லாண்டு கூடா ததைக்கூட்டு வானுக்குப் பல்லாண்டு
பல்லாண்டு விச்சின்றி நாறுசெய் வானுக்குப் பல்லாண்டு
பல்லாண்டு நங்கோ ரமண பகவற்குப் பல்லாண்டே. ௯

பல்லாண் டெழுத்துக் ககரமே போற்பல வுந்தானாப்
பல்லாண் டபராசத் தித்தோற்ற மாஞ்சொப் பனம்போலப்
பல்லாண் டுலக முதலாம் பரனுக்குப் பல்லாண்டு
பல்லாண்டு நங்கோ ரமண பகவற்குப் பல்லாண்டே. ௧௦

பல்லாண்டு சித்திர மூலமாம் பித்திக்குப் பல்லாண்டு
பல்லாண்டு சத்திக்குத் தாயொடு தந்தைக்குப் பல்லாண்டு
பல்லாண்டு முத்திக்கு வித்தா முதலுக்குப் பல்லாண்டு
பல்லாண்டு நங்கோ ரமண பகவற்குப் பல்லாண்டே. ௧௧

[ண்டு
பல்லாண்டு தந்தைக்குந் தந்தைக்குந் தந்தைக்குப் பல்லா
பல்லாண்டு தள்ளைக்குந் தள்ளைக்குந் தள்ளைக்குப் பல்லாண்டு
பல்லாண்டு பிள்ளைக்கும் பிள்ளைக்கும் பிள்ளைக்குப் பல்லா
பல்லாண்டு நங்கோ ரமண பகவற்குப் பல்லாண்டே. [ண்டு

பல்லாண் டுலகுக் கறிவொளி யாவாற்குப் பல்லாண்டு
பல்லாண் டுலகைப் பரத்திற் கரப்பாற்குப் பல்லாண்டு
பல்லாண் டுலகு பரத்தின்வே றாகாற்குப் பல்லாண்டு
பல்லாண்டு நங்கோ ரமண பகவற்குப் பல்லாண்டே. ௧௩

பல்லாண் டுணர்வோ டுலகு மொருங்குற் பவமாகப்
பல்லாண் டுணர்வா னுலகொளிர்ப் பானுக்குப் பல்லாண்டு
பல்லாண் டவையொருங் கேயொளிப் பானுக்குப் பல்லா
பல்லாண்டு நங்கோ ரமண பகவற்குப் பல்லாண்டே. [ண்டு

பல்லாண் டவையுற் பவமா யொடுங்கற் கிட்ணுகப்
பல்லாண்டு தானுற் பவியா தொடுங்கா வியல்பிற்றுப்
பல்லாண் டொளிரும் பரம்பொரு ளானுக்குப் பல்லாண்டு
பல்லாண்டு நங்கோ ரமண பகவற்குப் பல்லாண்டே. கரு

[யாப்
பல்லாண் டதிட்டானம் பொய்யாக வாரோ பமேமெய்
பல்லாண்டு தோற்றும்பாழ் மாயைப் புணர்ப்பற்குப் பல்லா
[ண்டு
பல்லாண்டப் பாந்தள்பற் றுப்பக லோனுக்குப் பல்லாண்டு
பல்லாண்டு நங்கோ ரமண பகவற்குப் பல்லாண்டே. கசு

பல்லாண் டறிஞராற் பாம்பணி யாங்கற் பனைவிட்டுப்
பல்லாண் டலங்க லும் பைம்பொ னும்போலப் பொருளாகப்
பல்லாண்டு பற்றப் படூஉமதிட் டானற்குப் பல்லாண்டு
பல்லாண்டு நங்கோ ரமண பகவற்குப் பல்லாண்டே. கஎ

பல்லாண் டுணர்வோ டுலகுகற் பித்தாற்குப் பல்லாண்டு
பல்லாண்டு சொல்லும் பொருளும்பா ரித்தாற்குப் பல்லா
[ண்டு
பல்லாண்டு நெல்லுந்தண் ணீருமா கின்றாற்குப் பல்லாண்டு
பல்லாண்டு நங்கோ ரமண பகவற்குப் பல்லாண்டே. கஅ

பல்லாண் டொருதா னிருவிசும் பாவாற்குப் பல்லாண்டு
பல்லாண்டு முத்தமிழ் நான்மறை யாவாற்குப் பல்லாண்டு
பல்லாண்டைந் தாறு திணைபொழு தாவாற்குப் பல்லாண்டு
பல்லாண்டு நங்கோ ரமண பகவற்குப் பல்லாண்டே. ககூ

பல்லாண்டு வானினு மாற்றப் பெரியற்குப் பல்லாண்டு
பல்லாண் டுயிரினு மாற்ற வரியற்குப் பல்லாண்டு
பல்லாண் டமுதினு மாற்ற வினியற்குப் பல்லாண்டு
பல்லாண்டு நங்கோ ரமண பகவற்குப் பல்லாண்டே. ௨௦

பல்லாண் டுதாசீன பாவத்தா லெல்லாவற் றோடுந்தான்
பல்லாண் டுறவு கலந்துநட் பானுக்குப் பல்லாண்டு
பல்லாண்டு சிற்பரா காயநெஞ் சத்தாற்குப் பல்லாண்டு
பல்லாண்டு நங்கோ ரமண பகவற்குப் பல்லாண்டே. ௨௧

பல்லாண்டு மாறுபடும்பல் விபூதி படைத்தானும்
பல்லாண் டிரண்டற்ற தன்பார மார்த்திகப் பண்பாலே
பல்லாண்டு மாறில் சமரச பாவற்குப் பல்லாண்டு
பல்லாண்டு நங்கோ ரமண பகவற்குப் பல்லாண்டே. ௨௨

பல்லாண் டொருதலை தீர்சம பாவற்குப் பல்லாண்டு
பல்லாண் டனைத்துந்தா னும்பிர பாவற்குப் பல்லாண்டு
பல்லாண்டு நிட்டூரத் துக்குநெட் டூரற்குப் பல்லாண்டு
பல்லாண்டு நங்கோ ரமண பகவற்குப் பல்லாண்டே. ௨௩

பல்லாண் டகிலஜீ வாந்தரி யாமிக்குப் பல்லாண்டு
பல்லாண் டவையுணர்ந் தோதற் கரியாற்குப் பல்லாண்டு
பல்லாண்டு தானேதா னுவொளிர் வானுக்குப் பல்லாண்டு
பல்லாண்டு நங்கோ ரமண பகவற்குப் பல்லாண்டே. ௨௪

பல்லாண்டு தான்றனக் கேவேத் தியனுக்குப் பல்லாண்டு
பல்லாண் டயலார்க் கறிபடா தானுக்குப் பல்லாண்டு
பல்லாண் டறிபவர் தானேயா வானுக்குப் பல்லாண்டு
பல்லாண்டு நங்கோ ரமண பகவற்குப் பல்லாண்டே. ௨௫

பல்லாண்டு போலி யுயிர்க்குள் ளுயிருக்குப் பல்லாண்டு
பல்லாண்டு புந்தி விளக்குள் விளக்குக்குப் பல்லாண்டு
பல்லாண்டு சுத்த வுளத்துள் ளுளத்துக்குப் பல்லாண்டு
பல்லாண்டு நங்கோ ரமண பகவற்குப் பல்லாண்டே. உசு

பல்லாண்டு வண்ணம் பலகொள்ளும் வெள்ளைக்குப் பல்லா[ண்டு
பல்லாண்டு காண்பவர் கண்வண்ணத் தானுக்குப் பல்லாண்டு
பல்லாண்டு வண்ணப் பளிங்கொளி மெய்யற்குப் பல்லாண்டு
பல்லாண்டு நங்கோ ரமண பகவற்குப் பல்லாண்டே. உஎ

பல்லாண்டு வாணீ பதியாம் பிரமற்குப் பல்லாண்டு
பல்லாண்டு பின்னைப் பதிநா ரணனுக்குப் பல்லாண்டு
பல்லாண்டு கௌரீ பதிசங் கரனுக்குப் பல்லாண்டு
பல்லாண்டு நங்கோ ரமண பகவற்குப் பல்லாண்டே. உஅ

பல்லாண்டு வில்வப் பரிமள மெய்யற்குப் பல்லாண்டு
பல்லாண் டிருவர் பரிந்தருச் சித்தபூங் கண்ணோடு
பல்லாண்டு பாரிசா தங்கமழ் பாதற்குப் பல்லாண்டு
பல்லாண்டு நங்கோ ரமண பகவற்குப் பல்லாண்டே. உகூ

பல்லாண்டு பாண்டிநாட் டின்றமிழ்ச் சொக்கற்குப் பல்லாண்[டு
பல்லாண்டு சோழநாட் டம்பல வாணற்குப் பல்லாண்டு
பல்லாண்டு தொண்டநாட் டேகாம் பரனுக்குப் பல்லாண்டு
பல்லாண்டு நங்கோ ரமண பகவற்குப் பல்லாண்டே. ௩0

பல்லாண்டு ஜோதிப் பருப்பத லிங்கற்குப் பல்லாண்டு
பல்லாண்டு மோனச் சிதம்பர வாசிக்குப் பல்லாண்டு
பல்லாண் டருள்விழித் தக்ஷிண மூர்த்திக்குப் பல்லாண்டு
பல்லாண்டு நங்கோ ரமண பகவற்குப் பல்லாண்டே. ௩க

பல்லாண்டு வேடம் பலபுனைந் தாடிக்குப் பல்லாண்டு
பல்லாண்டு காண்பா ரொடுமரங் காவாற்குப் பல்லாண்டு
பல்லாண்டு வேடங் களைந்து தனிப்பாற்குப் பல்லாண்டு
பல்லாண்டு நங்கோ ரமண பகவற்குப் பல்லாண்டே. ௩௨

பல்லாண்டு மக்கள் பரமாம் படிபதம் பார்தோயப்
பல்லாண்டு மானிட மாநடிப் பானுக்குப் பல்லாண்டு
பல்லாண்டு தேவாதி தேவப் பிரானுக்குப் பல்லாண்டு
பல்லாண்டு நங்கோ ரமண பகவற்குப் பல்லாண்டே. ௩௩

[போற்
பல்லாண்டு தன்னையே தானேய்த்துக் கொள்ளும் பரிசே
பல்லாண்டு கற்பனா லீலைசெய் வானுக்குப் பல்லாண்டு
பல்லாண்டு கற்பனை தான்கடந் தானுக்குப் பல்லாண்டு
பல்லாண்டு நங்கோ ரமண பகவற்குப் பல்லாண்டே. ௩௪

பல்லாண்டு கற்பனா வேடமே காண்பார்தங் காட்சிக்கட்
பல்லாண்டு பால விருத்த குமாரனாக் காண்படினும்
பல்லாண்டு கேவல சுத்த சிவத்துக்குப் பல்லாண்டு
பல்லாண்டு நங்கோ ரமண பகவற்குப் பல்லாண்டே. ௩௫

பல்லாண் டகத்துண்மை பார்ப்பா ரிதயத் தகளிக்கட்
பல்லாண் டகமக மென்றே பரஞ்சுட ராநாளும்
பல்லாண் டொளிர்தீப மங்கள சோதிக்குப் பல்லாண்டு
பல்லாண்டு நங்கோ ரமண பகவற்குப் பல்லாண்டே. ௩௬

பல்லாண் டிருந்தொளிர் சுத்தசச் சித்தாம் பரமான்மா
பல்லாண்டு தானா யிருக்கவுந் தன்னிற் பவபந்தம்
பல்லாண்டு மெய்போலப் பார்க்கப் படுவாற்குப் பல்லாண்டு
பல்லாண்டு நங்கோ ரமண பகவற்குப் பல்லாண்டே. ௩௭

பல்லாண் டநாதி மலமுத்த மெய்யனுத் தானின்றே
பல்லாண்டு பாசபந் தப்பட்ட தாகப் பசுநோக்காற்
பல்லாண்டு தான்மரு ளப்படு வானுக்குப் பல்லாண்டு
பல்லாண்டு நங்கோ ரமண பகவற்குப் பல்லாண்டே. ௩௮

பல்லாண்டெங் கெங்கும் பயில்வா னெனினும் பரஞானிக்
கல்லா லறிபடா னங்கங் ககத்தக் மாச்சேர்வான்
பல்லாண் டகஞ்சே தனைக்கறி வாவாற்குப் பல்லாண்டு
பல்லாண்டு நங்கோ ரமண பகவற்குப் பல்லாண்டே. ௩௯

பல்லாண்டு நானு ரெனும்மவ் விசாரப் பரிதியொளி
பல்லாண்டு சற்றுப் படர்தக் கணமந்தப் பாழ்கெட்டுப்
பல்லாண்டு தான்றானாப் பார்க்கப் படுவாற்குப் பல்லாண்டு
பல்லாண்டு நங்கோ ரமண பகவற்குப் பல்லாண்டே. ௪௰

பல்லாண் டிதய குருகுல வாசம் பணியங்குப் [போய்ப்
பல்லாண்டு தன்னையே தன்னா லுசாவிப்பொய்ப் பாசம்
பல்லாண்டு தன்னியல் பாமுத்தி கண்டாற்குப் பல்லாண்டு
பல்லாண்டு நங்கோ ரமண பகவற்குப் பல்லாண்டே. ௪௧

பல்லாண்டு சச்சித்தாந் தானே தனக்குக் குருநூலாய்ப் [டு
பல்லாண்டு தத்துவந் தானேயாப் பார்ப்பாற்குப் பல்லாண்
பல்லாண்டு தானென்று மோர்படித் தாவாற்குப் பல்லாண்டு
பல்லாண்டு நங்கோ ரமண பகவற்குப் பல்லாண்டே. ௪௨

பல்லாண்டு சாதகஞ் செய்காலுஞ் சாத்தியத் தேபோலப்
பல்லாண்டு பத்தா மவன்போலும் பண்பற்குப் பல்லாண்டு
பல்லாண்டு தானே பதிகதி யாவாற்குப் பல்லாண்டு
பல்லாண்டு நங்கோ ரமண பகவற்குப் பல்லாண்டே. ௪௩

பல்லாண் டுளேனா னெனும்பிரஞ் ஞானப் படிவத்தாற்
பல்லாண் டளவைவேண் டாவப ரோக்கற்குப் பல்லாண்டு
பல்லாண்டு கட்டுவீ டில்பர மார்த்தற்குப் பல்லாண்டு
பல்லாண்டு நங்கோ ரமண பகவற்குப் பல்லாண்டே. ௪௪

பல்லாண்டு ஸித்தமாத் தானே யிருந்தொளிர் ஸித்திபற்றிப்
பல்லாண்டு மாயா விலாசங்க ளென்று பரிகசித்துப்
பல்லாண் டணிமாதி யெள்கும் பரனுக்குப் பல்லாண்டு
பல்லாண்டு நங்கோ ரமண பகவற்குப் பல்லாண்டே. ௪௫

பல்லாண் டியாதொன் றியாவுமாக் காணும் படித்தாமோ
பல்லாண்டவ் வொன்றை யறிந்ததன்வாயிலா வவ்வெல்லாம்
பல்லாண்டு காணாது காணுங்கண் காணிக்குப் பல்லாண்டு
பல்லாண்டு நங்கோ ரமண பகவற்குப் பல்லாண்டே. ௪௬

பல்லாண் டறிவறிந் தார்தற் பரத்தை யறிந்தோராப்
பல்லாண் டயலறி வார்கற் பனையிற் படிவோராப்
பல்லாண்டு மெய்யாம் பரவா லறிவற்குப் பல்லாண்டு
பல்லாண்டு நங்கோ ரமண பகவற்குப் பல்லாண்டே. ௪௭

பல்லாண்டு பார்ப்போ னுளனல்லன் பாரா னுளனாவோன்
பல்லாண் டவற்றைநீ பாராமற் பார்ப்பானைப் பாரென்று
பல்லாண்டு தன்பர மார்த்தஞ்சேர்ப் பானுக்குப் பல்லாண்டு
பல்லாண்டு நங்கோ ரமண பகவற்குப் பல்லாண்டே. ௪௮

பல்லாண்டு தன்னுட் படவகி லங்களுந் தன்னுள்ளம்
பல்லாண்டு சாலப் பரக்க மலர்ந்த விகாசத்தாற்
பல்லாண் டயல்காணா நாணுஞ்சங் கோசற்குப் பல்லாண்டு
பல்லாண்டு நங்கோ ரமண பகவற்குப் பல்லாண்டே. ௪௯

பல்லாண் டுலோசன மல்லா துலோக முலோபத்தாற்
பல்லாண்டு சுட்டுண ராவெறும் பார்வையான் பார்ப்பான்
பல்லாண்டு கள்ள விழிவிழிப் பானுக்குப் பல்லாண்டு[போற்
பல்லாண்டு நங்கோ ரமண பகவற்குப் பல்லாண்டே. ௫௦

பல்லாண்டு ஜீவநோக் காற்கரி போல்வாற்குப் பல்லாண்டு
பல்லாண்டு காண்பா னெடும்புல மாவாற்குப் பல்லாண்டு
பல்லாண்டு மும்மை தனிற்றோற்று விப்பாற்குப் பல்லாண்டு
பல்லாண்டு நங்கோ ரமண பகவற்குப் பல்லாண்டே. ௫௧

பல்லாண் டலங்கலிற் பாம்புபோற் றோன்றப் பரத்தின்கட்
பல்லாண் டகப்பேயை யாட்டங்காண் பானுக்குப் பல்லாண்
பல்லாண் டகம்பர மாத்தெரிப் பானுக்குப் பல்லாண்டு [டு
பல்லாண்டு நங்கோ ரமண பகவற்குப் பல்லாண்டே. ௫௨

பல்லாண்டு கன்மம் பயன்கூட்டு வானுக்குப் பல்லாண்டு
பல்லாண்டு கர்த்தத் துவத்தாற் பிணிப்பாற்குப் பல்லாண்டு
பல்லாண்டவ் யானற வீடு பயப்பாற்குப் பல்லாண்டு
பல்லாண்டு நங்கோ ரமண பகவற்குப் பல்லாண்டே. ௫௩

பல்லாண்டு நானா ரெனும்பர மார்த்த விசாரவழிப்
பல்லாண்டு தன்சொரூ பம்பயப் பானுக்குப் பல்லாண்டு
பல்லாண் டறிவொளி யாமெய்ப் பரனுக்குப் பல்லாண்டு
பல்லாண்டு நங்கோ ரமண பகவற்குப் பல்லாண்டே. ௫௪

பல்லாண் டகம்புர ணத்தாலே யன்றிப் பளிச்சிட்டுப்
பல்லாண்டு மெய்யுருத் தேறப் படானுக்குப் பல்லாண்டு
பல்லாண்டு சிற்பரப் பார்ப்பா னருளுக்குப் பல்லாண்டு
பல்லாண்டு நங்கோ ரமண பகவற்குப் பல்லாண்டே. ௫௫

பல்லாண்டு தொம்பத சோதனை கண்டாற்குப் பல்லாண்டு
பல்லாண்டு தற்பதச் செம்பொரு ளானாற்குப் பல்லாண்டு
பல்லாண்டு தன்மயா னந்த பரிதற்குப் பல்லாண்டு
பல்லாண்டு நங்கோ ரமண பகவற்குப் பல்லாண்டே. ௫௬

பல்லாண்டு ஜீவ பரக்கலப் பாய சுரதத்தாற்
பல்லாண் டயலறி யாப்பரா னந்தற்குப் பல்லாண்டு
பல்லாண்டு சாந்தி ரசசம் பிரமற்குப் பல்லாண்டு
பல்லாண்டு நங்கோ ரமண பகவற்குப் பல்லாண்டே. ௫௭

பல்லாண்டு சாந்தியே சத்தியா வானுக்குப் பல்லாண்டு
பல்லாண்டு மற்றொரு சத்திவேண் டானுக்குப் பல்லாண்டு
பல்லாண்டு சத்தியை வென்ற பதத்தாற்குப் பல்லாண்டு
பல்லாண்டு நங்கோ ரமண பகவற்குப் பல்லாண்டே. ௫௮

பல்லாண் டெலாந்தன் னருட்பரா சத்தியின் பாலாக்கிப்
பல்லாண்டு சும்மா விருக்குஞ் சுகனுக்குப் பல்லாண்டு
பல்லாண் டசங்க விசுத்தப் பரனுக்குப் பல்லாண்டு
பல்லாண்டு நங்கோ ரமண பகவற்குப் பல்லாண்டே. ௫௯

பல்லாண்டு வேதம் பகர்மெய் யிலக்கணங் கட்கெல்லாம்
பல்லாண் டிலக்கியச் செம்பொரு ளாவாற்குப் பல்லாண்டு
பல்லாண்டு சுத்த சுதந்தர ஞானிக்குப் பல்லாண்டு
பல்லாண்டு நங்கோ ரமண பகவற்குப் பல்லாண்டே. ௬௦

பல்லாண்டு ஞானம் பதிருங் கேட்பத்தா லாட்டாதே
பல்லாண்டு சாற்றும் பெருநா வலனுக்குப் பல்லாண்டு
பல்லாண் டொருமொழிச் செம்பொரு ளானுக்குப் பல்லாண்டு
பல்லாண்டு நங்கோ ரமண பகவற்குப் பல்லாண்டே. ௬௧

**ப**ல்லாண்டுசொல்லப் படாவொருசொல்லற்குப் பல்லாண்டு
பல்லாண்டு புல்லப் படாச்செம் பொருளற்குப் பல்லாண்டு
பல்லாண்டு வெல்லப் படாவிறல் வீரற்குப் பல்லாண்டு
பல்லாண்டு நங்கோ ரமண பகவற்குப் பல்லாண்டே. ௬௨

**ப**ல்லாண்டு பொன்போற் சுடர்மா தவனுக்குப் பல்லாண்டு
பல்லாண்டு மோனம் பழுத்தபார்ப் பானுக்குப் பல்லாண்டு
பல்லாண்டு வண்பொருள் சேரந் தணனுக்குப் பல்லாண்டு
பல்லாண்டு நங்கோ ரமண பகவற்குப் பல்லாண்டே. ௬௩

**ப**ல்லாண்டு முற்றத் துறந்த முனிவற்குப் பல்லாண்டு
பல்லாண் டனைத்துமொன் றுந்திட்டியானுக்குப் பல்லாண்டு
பல்லாண்டு தன்ம தயாதத் துவனுக்குப் பல்லாண்டு
பல்லாண்டு நங்கோ ரமண பகவற்குப் பல்லாண்டே. ௬௪

**ப**ல்லாண்டு நாளும் பலியேற்றுண் பானுக்குப் பல்லாண்டு
பல்லாண்டு சில்கால் வலாற்கார மாய்ச்சில ராவிபற்றிப்
பல்லாண்டு தன்மய மாப்புசிப் பானுக்குப் பல்லாண்டு
பல்லாண்டு நங்கோ ரமண பகவற்குப் பல்லாண்டே. ௬௫

**ப**ல்லாண்டு பத்தரைத் தம்மினு முற்படப் பாரித்துப்
பல்லாண்டு முற்ற விழுங்குங் கடியற்குப் பல்லாண்டு
பல்லாண்டு மெய்யர்தம் பத்திப் பிரியற்குப் பல்லாண்டு
பல்லாண்டு நங்கோ ரமண பகவற்குப் பல்லாண்டே. ௬௬

**ப**ல்லாண்டு சண்டிசெய் பத்தி குறித்துப் பரிவட்டம்
பல்லாண்டு சோறுவெம் பாவத்துக் கீந்தாற்குப் பல்லாண்டு
பல்லாண்டு செய்ம்மனப் பான்மையே பார்ப்பாற்குப் பல்லா
பல்லாண்டு நங்கோ ரமண பகவற்குப் பல்லாண்டே. [ண்டு

**ப**ல்லாண்டு கர்த்தத் துவமறக் கற்றார் பணியெல்லாம்
பல்லாண்டு தன்பணி யாவுவப் பானுக்குப் பல்லாண்டு
பல்லாண்டு கர்த்தத் துவமுவர்ப் பானுக்குப் பல்லாண்டு
பல்லாண்டு நங்கோ ரமண பகவற்குப் பல்லாண்டே. ௬௮

**ப**ல்லாண்டு வீண்படா டோபப் பகைஞற்குப் பல்லாண்டு
பல்லாண்டு வேண்டா விருப்பை வெறுப்பாற்குப் பல்லாண்டு
பல்லாண்டுள் என்னை யுவந்தருள் வானுக்குப் பல்லாண்டு
பல்லாண்டு நங்கோ ரமண பகவற்குப் பல்லாண்டே. ௬௯

**ப**ல்லாண் டடியர் பசியாலே வாதைப் படாவாறு
பல்லாண்டு தன்றலை மேலே சுமந்தும் படிமீது
பல்லாண் டுணவு பரிந்தளிப் பானுக்குப் பல்லாண்டு
பல்லாண்டு நங்கோ ரமண பகவற்குப் பல்லாண்டே. ௭௦

**ப**ல்லாண் டடர்க்குப் பரிகார மாகப் பலகாலும்
பல்லாண்டு தன்னைப் பரவும்பத் தர்க்கு மொழிக்குமொழி
பல்லாண்டு தித்திக்கு நாமக் கரும்பற்குப் பல்லாண்டு
பல்லாண்டு நங்கோ ரமண பகவற்குப் பல்லாண்டே. ௭௧

**ப**ல்லாண் டிடம்பொரு ளேவலெல் லாமும் பரகதியும்
பல்லாண்டு பத்தர்க்குத் தாணுப் பயில்வாற்குப் பல்லாண்டு
பல்லாண் டடியர்க்கு நல்ல சிவத்துக்குப் பல்லாண்டு
பல்லாண்டு நங்கோ ரமண பகவற்குப் பல்லாண்டே. ௭௨

**ப**ல்லாண்டு தன்பதம் பற்றிய பத்தர்க்கு மற்றெல்லாம்
பல்லாண் டவாந்தர மாவளிப் பானுக்குப் பல்லாண்டு
பல்லாண் டகில சிவபாக் கியனுக்குப் பல்லாண்டு
பல்லாண்டு நங்கோ ரமண பகவற்குப் பல்லாண்டே. ௭௩

பல்லாண் டரக்கற்கு வாட்படை யீந்தாற்குப் பல்லாண்டு
பல்லாண்டு பாசு பதம்பார்த்தற் கீந்தாற்குப் பல்லாண்டு
பல்லாண்டு பற்பநா பற்காழி யீந்தாற்குப் பல்லாண்டு
பல்லாண்டு நங்கோ ரமண பகவற்குப் பல்லாண்டே. ௭௪

பல்லாண்டு வாழ்வு தரும்பெரு வாழ்வற்குப் பல்லாண்டு
பல்லாண் டறிவு தரும்வா லறிவற்குப் பல்லாண்டு
பல்லாண்டு வெற்றி தருஞ்செய துங்கற்குப் பல்லாண்டு
பல்லாண்டு நங்கோ ரமண பகவற்குப் பல்லாண்டே. ௭௫

பல்லாண்டு தன்னருட் பாதமூ லத்திற் படர்நெஞ்சம்
பல்லாண்டு சாந்திப் பயன்மலிந் தோங்கப் பரஞானம்
பல்லாண்டு நல்கும் பரமேச் சுரனுக்குப் பல்லாண்டு
பல்லாண்டு நங்கோ ரமண பகவற்குப் பல்லாண்டே. ௭௬

பல்லாண் டியம பயத்தாற் சரண்புக்க பத்தர்க்குப்
பல்லாண் டபயந் தருநிர்ப் பயனுக்குப் பல்லாண்டு
பல்லாண் *டரும்பிர மாதப் பதத்தற்குப் பல்லாண்டு
பல்லாண்டு நங்கோ ரமண பகவற்குப் பல்லாண்டே. ௭௭

பல்லாண்டு வஞ்சனை வஞ்சிப் பவனருட் பாதத்திற்
பல்லாண்டு தஞ்சம்புக் கார்நெஞ்சிற் பாய்சிற் பனையாலே
பல்லாண்டு கண்ணினுங் கண்கூடா வானுக்குப் பல்லாண்டு
பல்லாண்டு நங்கோ ரமண பகவற்குப் பல்லாண்டே. ௭௮

பல்லாண்டு கண்ணெதிர் நின்றுங் கரப்பாற்குப் பல்லாண்டு
பல்லாண் டயலொன்றும் பாரான் பலவுந்தான் பார்ப்பான்
பல்லாண்டு கள்ள விழிவிழிப் பானுக்குப் பல்லாண்டு[போற்
பல்லாண்டு நங்கோ ரமண பகவற்குப் பல்லாண்டே. ௭௯

---

*அருமை - இன்மை; பிரமாதம் - உண்மை மறதி.

**ப**ல்லாண்டு தன்னை யுபாசிக்கும் பத்த ரகந்தோறும்
பல்லாண் டொளிர்பர தெய்வ விளக்குக் குப் பல்லாண்டு
பல்லாண்டு சுட்டற் றொளிருமெய்ப் பார்ப்பாற்குப் பல்லா
பல்லாண்டு நங்கோ ரமண பகவற்குப் பல்லாண்டே. [ண்டு

**ப**ல்லாண்டு நிட்பிர பஞ்சநோக் கத்தற்குப் பல்லாண்டு
பல்லாண்டு துஞ்சாத் துரீய விழிப்பற்குப் பல்லாண்டு
பல்லாண்டு சுத்தமெய்ஞ் ஞான சொரூபற்குப் பல்லாண்டு
பல்லாண்டு நங்கோ ரமண பகவற்குப் பல்லாண்டே. அக

**ப**ல்லாண்டுசெய்துஞ்செய்யாச்செயலானுக்குப்பல்லாண்டு
பல்லாண்டு சொற்றுஞ்சொல் லாச்செஞ்சொல் லானுக்குப்
[பல்லாண்டு
பல்லாண் டுளியுமுள் ளாவுள்ளத் தானுக்குப் பல்லாண்டு
பல்லாண்டு நங்கோ ரமண பகவற்குப் பல்லாண்டே. அஉ

**ப**ல்லாண்டு ஒத்துவ மற்றமெய்ஞ் ஞானிக்குப் பல்லாண்டு
பல்லாண்டு முத்திக் கருத்தற்ற முத்தற்குப் பல்லாண்டு
பல்லாண்டு துப்பறி யாப்பெருந் துப்பற்குப் பல்லாண்டு
பல்லாண்டு நங்கோ ரமண பகவற்குப் பல்லாண்டே. அ௩

**ப**ல்லாண்டு சிந்திப் பவர்சித்த ரஞ்சனப் பண்பாலே
பல்லாண் டறிவுநூற் பண்புடை யாளற்குப் பல்லாண்டு
பல்லாண்டு தன்பிரி வஞ்சத் தகுவாற்குப் பல்லாண்டு
பல்லாண்டு நங்கோ ரமண பகவற்குப் பல்லாண்டே. அச

**ப**ல்லாண்டு சித்தத்துட் சித்தாத் திகழ்வாற்குப் பல்லாண்டு
பல்லாண்டு சித்த மலந்தீர் சிவத்துக்குப் பல்லாண்டு
பல்லாண்டு சித்தர் தொழும்பர மேட்டிக்குப் பல்லாண்டு
பல்லாண்டு நங்கோ ரமண பகவற்குப் பல்லாண்டே. அரு

பல்லாண்டு சித்தர் தொழும்பிர சித்தற்குப் பல்லாண்டு
பல்லாண்டு பத்தர் செயும்பிர பத்தற்குப் பல்லாண்டு
பல்லாண்டு யோக ருறும்பிர யுக்தற்குப் பல்லாண்டு
பல்லாண்டு நங்கோ ரமண பகவற்குப் பல்லாண்டே. ௮௬

பல்லாண்டு பத்தராற் போற்றப் பெறுவாற்குப் பல்லாண்டு
பல்லாண்டுன் மத்தராற் றூற்றப் பெறுவாற்குப் பல்லாண்டு
பல்லாண்டு சுத்தரா ஞேற்கப் பெறுவாற்குப் பல்லாண்டு
பல்லாண்டு நங்கோ ரமண பகவற்குப் பல்லாண்டே. ௮௭

பல்லாண் டடியவர் பக்குவங் காண்பான் பதிவிருந்து
பல்லாண் டணிமாதி யட்டமா சித்தியாம் பாவையரால்
பல்லாண்டு நோன்பைப் பரிசோதிப் பானுக்குப் பல்லாண்டு
பல்லாண்டு நங்கோ ரமண பகவற்குப் பல்லாண்டே. ௮௮

பல்லாண் டுளத்துட் பதுக்கிருப் பானுக்குப் பல்லாண்டு
பல்லாண்டு பத்திப் பணிசெய்யச் செய்யப் பதுக்குவிட்டுப்
பல்லாண் டுயிர்ப்பதம் பார்த்துநேர் நிற்பாற்குப் பல்லாண்டு
பல்லாண்டு நங்கோ ரமண பகவற்குப் பல்லாண்டே. ௮௯

பல்லாண்டு பத்தர்தா பந்தணி திங்கட்குப் பல்லாண்டு
பல்லாண்டு பாவஞ் சுடுபா வகனுக்குப் பல்லாண்டு
பல்லாண் டிதய மலர்த்தும் பரிதிக்குப் பல்லாண்டு
பல்லாண்டு நங்கோ ரமண பகவற்குப் பல்லாண்டே. ௯௦

பல்லாண்டுன் மத்தர் மனப்பிர மாதற்குப் பல்லாண்டு
பல்லாண்டு புத்தர் மதிப்பிர போதற்குப் பல்லாண்டு
பல்லாண்டு முத்தர் நுகர்பிர மோதற்குப் பல்லாண்டு
பல்லாண்டு நங்கோ ரமண பகவற்குப் பல்லாண்டே. ௯௧

பல்லாண்டு வீட்டு விழுப்பொருள் வேந்துக்குப் பல்லாண்டு
பல்லாண்டு தன்சொரு பத்திறஞ் சித்திர காரிதன்னுற்
பல்லாண்டு தீட்டற் கரிய சிவத்துக்குப் பல்லாண்டு
பல்லாண்டு நங்கோ ரமண பகவற்குப் பல்லாண்டே. ௩௨

[லாண்டு
பல்லாண்டென் மாமையுஞ் சங்குங்கொண் டானுக்குப் பல்
பல்லாண்டென் னெஞ்சு நிறையுங்கொண் டானுக்குப் பல்
[லாண்டு
பல்லாண் டுயிரோ டுணர்வுங்கொண் டானுக்குப் பல்லாண்டு
பல்லாண்டு நங்கோ ரமண பகவற்குப் பல்லாண்டே. ௩௩

பல்லாண்டு சாலப் படைத்த பெருமிதத் தார்நிற்கப்
பல்லாண் டெளியே னுளங்கவர் கள்ளற்குப் பல்லாண்டு
பல்லாண் டுபசாந்த பாக்கிய வள்ளற்குப் பல்லாண்டு
பல்லாண்டு நங்கோ ரமண பகவற்குப் பல்லாண்டே. ௩௪

பல்லாண் டகம்பொதி பாசப் படர்கெடப் பார்ப்பானுய்ப்
பல்லாண் டெனதுட் குடிபுகுந் தானுக்குப் பல்லாண்டு
பல்லாண் டகந்தானே தூய்தாக்கு வானுக்குப் பல்லாண்டு
பல்லாண்டு நங்கோ ரமண பகவற்குப் பல்லாண்டே. ௩௫

பல்லாண்டுபத்தினித்தொண்டுபூண் டுள்ளக்குறிப்பேற்றுப்
பல்லாண்டு போற்றிப்பல் சத்தியுந் தாழுந்தன் பாதத்தே
பல்லாண் டெனையிருக் கப்பணித் தானுக்குப் பல்லாண்டு
பல்லாண்டு நங்கோ ரமண பகவற்குப் பல்லாண்டே. ௩௬

பல்லாண் டெனைத்தன் பதத்தொடு சேர்த்தருட் பாலூட்
பல்லாண் டணைத்த பராசத்தி பங்கற்குப் பல்லாண்டு [டிப்
பல்லாண் டடியர்க் கொருங்கம்மை யப்பற்குப் பல்லாண்டு
பல்லாண்டு நங்கோ ரமண பகவற்குப் பல்லாண்டே. ௩௭

பல்லாண்டு புன்புலே நாய்க்குத் திருவருட் பாலூட்டிப்
பல்லாண்டுட் சஞ்சலம் பாறத் தெளிந்த பராவாக்காற்
பல்லாண்டென் னெஞ்சினிற் கொஞ்சுறும் பாதற்குப் பல்லா
பல்லாண்டு நங்கோ ரமண பகவற்குப் பல்லாண்டே. [ண்டு

பல்லாண்டு மாணிக்க வாசகத் தீந்தமிழ்ப் பாட்டோடு
பல்லாண் டுபநிடப் பாமகிழ்ந் தேற்கும் பரிசேபோற்
பல்லாண் டகமகிழ்ந் தென்முறை வேட்டாற்குப் பல்லாண்
பல்லாண்டு நங்கோ ரமண பகவற்குப் பல்லாண்டே. [டு

பல்லாண்டென் னெஞ்சமே பஞ்சணை யாகப் பலகாலும்
பல்லாண் டறிதுயிற் பள்ளிகொள் வானுக்குப் பல்லாண்டு
பல்லாண் டொருங்கரங் காநடிப் பானுக்குப் பல்லாண்டு
பல்லாண்டு நங்கோ ரமண பகவற்குப் பல்லாண்டே. ௧00

பல்லாண் டிறைபணி யென்னும் பரபத்திப் பாதையுறப்
பல்லாண்டு நங்களை வாழவுய்ப் பானுக்குப் பல்லாண்டு
பல்லாண்டென் ஜன்மசா பல்லியஞ் செய்தாற்குப் பல்லா
பல்லாண்டு நங்கோ ரமண பகவற்குப் பல்லாண்டே. [ண்டு

பல்லாண்டு சும்மா விருப்பதே மேதக்க பத்தியாகப்
பல்லாண்டுட் கொள்ளு முதார சிவத்துக்குப் பல்லாண்டு
பல்லாண்டு பூரண நித்த திருத்தற்குப் பல்லாண்டு
பல்லாண்டு நங்கோ ரமண பகவற்குப் பல்லாண்டே. ௧0௨

பல்லாண் டுணர்வுக்கு வீடாய வுண்மைக்குப் பல்லாண்டு
பல்லாண் டுவகைக்கு வீடாய சாந்திக்குப் பல்லாண்டு
பல்லாண்டு தன்மவீ டாந்தியா கத்துக்குப் பல்லாண்டு
பல்லாண்டு நங்கோ ரமண பகவற்குப் பல்லாண்டே. ௧0௩

பல்லாண்டு சூழுந்தன் பாங்கர்நெஞ் சத்தமம் பாழாகப்
பல்லாண்டு தன்மலர் மார்பின் வலத்தேசிற் பானத்தாற்
பல்லாண்டு நாளு னெனக்கிளர் சத்திக்குப் பல்லாண்டு
பல்லாண்டு நங்கோ ரமண பகவற்குப் பல்லாண்டே. ௧0௪

## (ஆசிரிய விருத்தம்)

பண் : பஞ்சமம் (புன்னுகவராளி)

பல்லாண்டு சும்மா விருந்தொளிர் வான்சுத்த
சத்திக்குப் பல்லாண்டு
பல்லாண்டு தன்மயா னந்தத் தெழும்பர
பத்திக்குப் பல்லாண்டு
பல்லாண்டு பார்ப்பார்க் கியல்பாம் பரமான்ம
சித்திக்குப் பல்லாண்டு
பல்லாண்டு நங்கோ ரமண பகவன்
பதத்துக்குப் பல்லாண்டே. ௧0௫

பல்லாண்டு பத்தர்தன் பந்துடைத் தூன்றுந்தம்
பத்துக்குப் பல்லாண்டு
பல்லாண் டவிச்சைக் கலிகடி ஞானசம்
பத்துக்குப் பல்லாண்டு
பல்லாண் டதீத சகஜ நிருவிகற்
பத்துக்குப் பல்லாண்டு
பல்லாண்டு நங்கோ ரமண பகவன்
பதத்துக்குப் பல்லாண்டே. ௧0௬

(கலிநிலைத்துறை)

பல்லாண்டு பத்தர் பலபட வாழ்த்திப் பரகாலப்
பல்லாண் டடிக்குப் படிக்கும்பல் லாண்டு பதின்மடங்காப்
பல்லாண் டவர்க்கே பயனும் பரிசற்குப் பல்லாண்டு
பல்லாண்டு நங்கோ ரமண பகவற்குப் பல்லாண்டே. ௧0௭

### வாழ்த்து

பல்லாண்டு நங்கோ ரமணனைப் பத்தர் குழாம்பாடப்
பல்லாண்டு நூற்றெட்டுப் பாடிநல் கென்று பரிவோடும்
பல்லாண்டு நாரா யணன்கேட்கச் சொன்னவிப் பல்லாண்டு
பல்லாண்டு வாழி படிப்பவர் தம்மோ டருட்பதத்தே.௧0௮

திருச்சிற்றம்பலம்

# ௭. திருப்பல்லாண்டு (௫)

(ஆசிரிய விருத்தம்)

பண் : நட்டபாடை (நாட்டை)

திருச்சிற்றம்பலம்

வேத முடிக்கண் விளங்குசுத் தாத்து
விதப்பர மேட்டிமகிழ்ந்
தேத மறயா னியானென் றிதயத்
திலங்குங் குருரமணன்
ஆத லழித லிரண்டுமில் லாதே
யனாதி யனந்தசத்தாம்
போத சொரூபமாப் பொங்கும் பதத்துக்குப்
பல்லாண்டு பாடுதுமே. ௧

மாண்டகு மார்பன் மலைபோன் றிமிர்புயத்
தான்முழந் தாள்காறும்
நீண்டகை யான்செந் திருநிருத் தம்புரி
தன்சந் நிதியாரும்
காண்டகை யான்களி மாமுகத் தான்கழி
பேருவ கைபொங்க
ஆண்டகை யாவென்னை யாண்டான் பதத்துக்குப்
பல்லாண்டு பாடுதுமே. ௨

தொண்டனை யாளத் துலங்குமெய்ஞ் ஞான
குருவாஞ் சொரூபன்சொல்
விண்டன வெல்லா மிகையென நீக்கி
வெறுஞ்சுட் டறிவாலே
கண்டன வெல்லா மனக்கற் பனையெனக்
கண்டனை செய்துள்ளே
உண்டெனத் தானு வொளிவிடு மெய்யற்குப்
பல்லாண்டு பாடுதுமே. ௩

தூக்கிய சுத்த சதாசிவ தற்பதந்
தத்தோ மசியெனுமா
வாக்கியத் தாலே வழங்கும் பரதெய்வ
வள்ளற் குருரமணன்
ஆக்கிய நாயே னனந்தசென் மத்தவத்
தாற்சே ரருட்பயனும்
பாக்கிய மாகப் படைத்த பதத்துக்குப்
பல்லாண்டு பாடுதுமே. ௪

நுகவுமென் னெஞ்சே நவைகுறித் தென்னை
நயந்துதா னுண்டுகொண்டான்
தகவு பிறிதொன்றுஞ் சாரா விடினுந்
தமிழா லகமகிழ்வுற்
றகவு மடியார்க் கருள்புரிந் தானு
மபார சிவாம்புதியாம்
பகவ னடியோம்பண் டாரப் பதத்துக்குப்
பல்லாண்டு பாடுதுமே. ௫

ஏதிலாய் நானென் றெழுந்தே தனைமறந்
தேங்கா திறைரமணன்
காதலா லுள்ளங் கசிந்தே கரையக்
கடையேனை யாண்டதனால்
ஓதலா காமெய்ம் முழுமுத லாகி
யுபசார மாத்திரத்தாற்
பாதமா வோதும் பரசொரூ பத்துக்குப்
பல்லாண்டு பாடுதுமே. ௬

எம்மா லியலுங்கைம் மாறொன்று மில்லை
யெழில்சே ரிறைரமணப்
பெம்மான் றனது பெருங்கரு ணைத்திறத்
தாலே பெரிதுவந்து
சும்மா விருந்தே சொரூப சுகந்துய்த்துத்
தூங்காது தூங்கவெனக்
கம்மா வருள்செய்த வவ்வடி யாட்சிக்குப்
பல்லாண்டு பாடுதுமே. ௭

பிறையா டியசடைப் பெம்மான் கழலைப்
பெறமுற் பிறப்பொன் றிலும்
முறையான் முயலாத மூர்க்கனென் றெள்ளான்
முகஞ்செய் குருமூர்த்தி
கறையா டியகண்டன் கல்லாப்பொல் லேன்களிக்
கத்தன் கனமவுனப்
பறையான் மொழிந்த பரமார்த்தத் தானுக்குப்
பல்லாண்டு பாடுதுமே. ௮

பற்பல் லடியர்க்குப் பாசு பதாதிமுன்
பாலித் தருளியல்பாற்
பிற்பல் லடியர்க் கவர்மனே பீட்டம்
பிறவுந் தரும்பெருமான்
உற்பலக் கண்ணி யுமையாளுக் கொப்பவென்
னுள்ளுங் களிரமணன்
அற்புத ஞான வருட்பதத் துக்குப்பல்
லாண்டுநாம் பாடுதுமே. ௯

நாசமில் லாத்தன் னருளை நாடாத்தியேன்
ஞாலப்பாழ் மோகமுறு
நேசபந் தத்து நிகளந் தறிபட்டு
நீடுதன் மெய்ப்புகழ்நான்
பேசவந் தென்புன் பிறப்பறுத் தாற்போற்
பிறவடி யார்தமது
பாசபந் தங்களும் பாற்றும் பதத்துக்குப்
பல்லாண்டு பாடுதுமே. ௧௦

மந்தா கினியொடு மாதங்கி தானும்
மகிழ்வேங் கடரமணன்
வந்தாரெல் லோரும் வலிதடர்ப் புண்டுதன்
மாணடி தாமிறைஞ்சிச்
சிந்தா குலங்கெடச் சேவைசா தித்துத்
திருவருட் பாலனஞ்செய்
பைந்தா மரைக்கட் பகவன் பதத்துக்குப்
பல்லாண்டு பாடுதுமே. ௧௧

எடுத்தெடுத் தாயிர நாவுடைச் சேட
னியம்பினு முற்றாச்சீர்
படைத்துடை யான்பரி பாகமுண் டாவருட்
பார்வையின் மோனத்தால்
இடித்திடித் துண்மை யியம்பி யுளங்கொள
வெண்ணி லடியாரை
அடித்தடித் தக்காரந் தீற்றியாள் வானுக்குப்
பல்லாண்டு பாடுதுமே. கஉ

காலுக்கு வீரக் கழற்போற் கரத்துக்குக்
கர்ப்புக் கவினுடையான்
மாலுக்குச் சக்கர நல்கிய மன்னவன்
வண்டா மகிழ்ந்துபதத்
தாலிக்கு மன்ப ரகத்தே யரந்தை
துரந்தே யனவரதம்
பாலிக்கு மின்னருட் பண்பன் பதத்துக்குப்
பல்லாண்டு பாடுதுமே. கங

பேசற் கரிய பெரும்பிரா னேனும்
பெருங்காதல் சேர்ந்தசிவ
நேசர்க் கெளிதா நினைக்கப் படுங்குண
நீத குருரமணன்
தேசப் பளிங்கிற் றெளிந்தமெய்ஞ் ஞானத்
திகழொளி சேர்படிவன்
பாசப் பழிதீர் பரம பதத்துக்குப்
பல்லாண்டு பாடுதுமே. கச

யாரு மெழுதற் கியலா வெழினல
மேய்ந்த ரமணனடிக்
கூருமெய் யன்பா லுளத்துமின் சாரம்பாய்
வுற்ற வுணர்ச்சியுறக்
கூரும் பரவசங் கொண்டு சிவானந்தக்
கூத்தன் குணம்பரவிப்
பாரும் விசும்பும் பயிலத் திரண்டெழப்
பல்லாண்டு பாடுதுமே. கரு

அக்கிர மக்கா ரவிச்சையை மாய்க்குஞா
ஞன்ம சொரூபதன்ம
விக்கிர மார்க்கன்மார்க் கண்டன்மேற் பாசம்
விசிறி வெகுண்டுமுழங்
குக்கிர சண்டனை யோங்கி யுதைத்த
வுதார வருட்பதத்துக்
கக்கிர பூஜை யகங்களித் தாற்றிப்பல்
லாண்டுநாம் பாடுதுமே. கசு

ஊனமா மூத்தை யுடல்வடி வாம்பொய்
யுணர்வா மகமூலத்
தானமா முள்ளத் தகமக மென்றொளிர்
சாந்த சொரூபத்தான்
மோனமா நின்று முழங்காதி மூலப்
பகாமொழி யாஞ்சச்சிற்
பானமாந் தெய்வப் பரம பதத்துக்குப்
பல்லாண்டு பாடுதுமே. கஎ

அயன்பத மல்லா வரிபத மாதி
யனைத்துப் பதமுமன்றே
மயன்பத மாக மறுத்துக் கடிந்து
மனோதீத மாவிளங்கும்
வியன்பத மாய விசுத்தமெய்ஞ் ஞான
வெளிப்பத மேதனது
நயன்பத மாத்தரு நம்பன் பதத்துக்குப்
பல்லாண்டு பாடுதுமே. கஅ

தொழுதார் பிறவித் தொழுநோய் கெடப்பரி
சுத்த சொரூபமுறக்
கழுதார் கணத்தொடு காட்டிற் களிநடங்
காட்டுங் கனரமணன்
எழுதா வெழுத்தா மியன்மொழிக் கான
விலக்கியச் செம்பொருளாம்
பழுதற்ற வுண்மைப் பதந்தனைப் பல்லாண்டு
பாடிப் பரவுதுமே. கசு

தொல்லை யிருஞ்சென்மச் சூழலின் மாயச்
சுலாவொரு சூனியமா
ஒல்லை யொழியவென் னுள்ளொளி பாய்ச்சிய
வுத்தம வித்தகன்மாத்
தில்லையின் கண்ணுமென் சிந்தையின் கண்ணுந்
திருநடஞ் செய்துவிளங்
கெல்லையில் லாதபே ரின்பப் பதத்துக்குப்
பல்லாண் டிசைக்குதுமே. உ0

இருண்முழை யாக விருண்டவென் னெஞ்சக்
கிரவியா நின்றொளிர்செம்
பொருண்முத லாம்பரி பூரண போதன்
புகழ்வேங் கடரமணன்
அருண்மதி யாவெனக் கார்வந் தருங்கட்
டழகு முகப்பொலிவான்
வெருண்மனத் துன்பை வெருட்டும் பதத்துக்குப்
பல்லாண்டு விள்ளுதுமே. உக

கற்பனை யாமயற் காட்சியற் றோங்குங்
கனசொரு பந்தனதை
விற்பனை யாக்கியென் வெற்றுட லாதி
விலைபோற் பெரிதுமகிழ்ந்
தற்பனை யோர்பொரு ளாகவந் தாண்ட
வருங்குண மாமேரு
வெற்பனை யேத்தியவ் வேந்தன் பதத்துக்குப்
பல்லாண்டு விள்ளுதுமே. உஉ

உண்ணா ரமுத சொரூப முலகி
லுடற்சட்டை யொன்றணிந்து
கண்ணா லமுதக் களிதரு ஞானக்
கதிரா யிரம்பரப்பி
அண்ணா மலையடித் தென்பா ரிசத்தே
யருட்கொலு வீற்றிருக்கும்
தண்ணார் கடலாந் தலைவன் பதத்துக்குப்
பல்லாண்டு சாற்றுதுமே. உஙு

நிகமா கமப்பொது நிச்சய மாக
நிகழும் பரம்பொருளே
அகமாகக் காட்டு மவலோ கிதபுத்த
னன்புக்குப் பாத்திரமாத்
தகமா தவஞ்செய்து சத்தி நிபாதந்
தருபரி பாகத்தாற்
சகமாயந் தீர்ந்து சதாசிவ மாகிநாம்
பல்லாண்டு சாற்றுதுமே. உச

கூரந்தமா லாம்புலக் காட்சியிற் பட்டுக்
கலவரஞ் சேர்மதியாற்
புரந்தரா வென்னப் புலம்பியே யோவிடும்
போதிதா போந்தனனென்
றிரந்தநா யேனுக் கெளிவந்து தோன்றி
யெனது மனமயக்கம்
துரந்தமா தேவன் சுடர்வண் பதத்துக்குப்
பல்லாண்டு சொல்லுதுமே. உரு

அரிய னெளிய னவரவர்க் கேற்ப
வணியவன் சேயவன்மற்
றுரிய னகில வுயிர்க்குமென் றென்று
முசாவத் தகுசொருபன்
கரியன் வெளியன் கனவேங் கடசிவன்
கைதவக் கற்பனைதீர்
துரிய நிலைக்கட் சுடரும் பதத்துக்குப்
பல்லாண்டு சொல்லுதுமே. உசு

திவியத்துக் குந்திவி யாந்தன் றிருவருட்
சித்திர மாண்பென்னே
புவியத்து மாந்தர் பொறிகொண்டு நோக்கிப்
புலப்படா வாற்றுன்மற்
றவியத்த மென்றே யழுங்குவா ராக
வடியனே னெஞ்சத்தே
சுவியத்த மாகத் துலங்குமெய்ஞ் ஞான
சொரூபற்குப் பல்லாண்டே. உஎ

தழுதழு கண்டமுந் தாழ்ப்பரு பாழ்ப்பமுந்
தாவிய வாவியுமாய்
முழுமன மொன்றி மொழித்தொழி லோடு
முகம்புரி மூர்த்தியென்
றழுதழு துள்ள மழன்மெழு காகக்
குழைந்துரு கன்பாலே
தொழுதெழு முண்மைத் தொழும்பருட் டோன்று
சொரூபற்குப் பல்லாண்டே. உஅ

வாழ்கசோ பான வரன்முறை யாலே
வழங்குசன் மார்க்கதன்மம்
தாழ்க வவிச்சைத் தமந்தரச் சார்சிச்
சடவகங் காரமதி
ஏழ்கசோ ஞசல வின்னருட் சோதி
யிலங்கமெய் யன்பருள்ளம்
சூழ்க சொரூபச் சுடர்ப்பத மெங்கணுந்
தோன்றுக பல்லாண்டே. உகூ

மன்னுக வண்ணா மலையடிச் சாரல்
வளங்குல வாச்சிரமம்
துன்னுக தொண்டத் தொகையவர் நாளுந்
துலங்குக சுத்தவருள்
தன்னிக ரற்ற தயாபர மூர்த்தி
சரணமே தாரகமாப்
பன்னுக வாண்டான் பரம பதத்துக்குப்
பல்லாண்டு பல்லாண்டே. ௩௦

திருச்சிற்றம்பலம்

—❀—

# ௮. வாழ்த்து

(தாழிசை)

பண் : செந்துருத்தி (மத்யமாவதி)

திருச்சிற்றம்பலம்

திருக்கநீங் கிச்செயத் தக்கன வாற்றித்
தலையாய மக்க ளிடர்தீரவே
அருக்கனுஞ் சோமனு மங்கியு மாக
வமைந்தொளிர் முக்கட் சுடர்வாழியே. க

ஏனை யவற்றை யெலாமகற் றிப்பிற
கெஞ்சிய வவ்வறி வேநீயெனத்
தானியல் சிற்பர தற்பரத் தோடெனைத்
தன்மய மாக்கிய தான்வாழியே. உ

வறந்தலை யான வனுந்தரத் தேதடு
மாறித்தண் ணீரா வறுங்கானலே
மறந்தலை கின்றபுன் மாயப் பிறப்பற
மாற்றுமெய்ஞ் ஞான வரன்வாழியே. ௩

அரும்பத மாத்தே ரபரி மிதப்பர
மான்ம பதந்தரு வான்வாழியே
திரும்புத லற்றொளிர் சிற்பர மான
சிதம்பர தேவ சிவன்வாழியே. ௪

அந்தரம் போகா தடியனுக் குண்மை
யறிவு கொளுத்தி யகந்தேறவே
பந்தனை யென்னும் பரிபவஞ் செற்றுப்
பரவீ டளித்த பரன்வாழியே. ௫

ஊழி யுலந்து முலப்பிலா வுண்மை
யுணர்வின் புணர்வா லுளந்தேறவே
வாழி சிவானுப வந்தரு சாந்த
மகோததி மங்கா வளம்வாழியே. ௬

சஞ்சலந் தீருப சாந்தந் தழைத்த
சதாசிவ சாயுச் சியமிம்மையே
நெஞ்சகந் தேற நினைந்தநே யர்க்கு
நிகழ்த்தும் ரமண ரியன்வாழியே. ௭

ஏழுல குந்தொழு மின்ப மனோகர
னெந்தை ரமண சிவன்வாழியே
பாழி லுழன்ற படிற்று மனக்கற்
பனையகற் றுஞ்சிற் பரன்வாழியே. ௮

முன்னணிக் கென்னை முகம்புரிந் தாண்டு
முயங்கிய மோன முதல்வாழியே
தன்னடிக் கீழென தின்னுயிர் வாழத்
தழைத்த நிழற்றத் துவன்வாழியே. ௯

நினைந்தமெய் யன்பர்தந் நெஞ்சத் துலப்பின்றி
நீடுங் கருணை நிதிவாழியே
புனைந்துபூ மாலை புகழ்ந்தேத்தும் புண்ணியர்
காமம்பொய் போகாப் பெ[illegible]திவாழியே. ௧௦

பெருந்தகை யான பிரம்ம சொரூபப்
பிரான்சி ரமணன் பெருந்தண்டுறைக்
குருந்தமூ லத்துமென் குஞ்சியின் மேலுங்
குலவுபூங் கோலப் பதம்வாழியே. கக

சுந்தர ஜோதி துலங்கு வசீகரந்
துன்னு விலாசக் கழல்வாழியே
எந்தர மன்றி யெழுந்துளத் தோங்குபே
ரின்பப் பதச்சி ரெழில்வாழியே. கஉ

சேம நிதித்திரள் சித்தத் தொளிர்சிவ
சிந்தனை யென்றுண்மை தாங்தேர்தலாற்
காமனை தீர்ந்தநிட் காமத் தவத்தர்
கருத்துக் கிசைந்த கழல்வாழியே. கங

சரணா கதருக் கரணாக நின்ற
சதாசிவன் சிற்பரத் தாள்வாழியே
கருணா கரனைக் கலிகடிந் தாளுங்
களைகணன் கண்ணார் கழல்வாழியே. கச

ஆல மணிங்தொளிர் நீல மிடற்றி
னரன்பர னென்ன வகங்தேறலாற்
சால மகிழ்ந்து சரண்புக் கவர்க்கொரு
சாவா மருந்தாஞ் சரண்வாழியே. கரு

காளி மடங்கிக் கவிழ்ந்தவ ளாமுகங்
காணார்த் துவதாண் டவம்வாழியே
மூளி படாத முழுமுதற் பெற்றிசேர்
மோனப் பெருமான் முகம்வாழியே. கசு

புத்திக்கு மூலமாப் பொங்குசச் சித்தாம்
புரண சொரூபன் புணர்ப்பொன் றிலா
முத்திக்கு வித்தா முதல்வன் கதிர்வாண்
முகஞ்சேர் திருவாய் மொழிவாழியே. கஎ

சூழ்ந்த வவிச்சைத் தொகைகுலைந் தோடத்
துரக்கு நுதற்கட் சுடர்வாழியே
ஆழ்ந்த வகத்தி னளக்கப் படாப்பர
மான்ம சொரூப னடல்வாழியே. கஅ

ஞானயோ கத்துக் கெடுத்துக்காட் டாவொளிர்
நம்ப னியல்பா நடைவாழியே
மோனமாந் தென்முக மூர்த்திசின் முத்திரை
மோகங் கெடுக்கு முறைவாழியே. கசு

அளித்திர ளாகமெய் யன்பர்கூட் டுண்கண்
ணமுத சொரூப னளிவாழியே
களித்திர ளான கழற்சே வடிச்செங்
கமலா லயன்செய் களிவாழியே. உ0

இருவேறு பாட்டுக் கிடங்கொடா வுண்மை
யிதயத் துணர்வா மியல்வாழியே
பொருவே றிலாச்செம் பொருளறம் போகம்
புகழ்மலிந் தோங்கும் புகல்வாழியே. உக

மத்தம் பிடித்து மனந்தன் னடிக்கே
மடுத்தார்க் கருளு மகிழ்வாழியே
புத்தம் புதியதாப் பொங்கும்பே ரின்பம்
புரிதலா லோங்கும் புகழ்வாழியே. உஉ

கொழுந்தழல் போலக் குலவுமெய்ஞ் ஞானங்
குறித்தசெங் காவிக் கொடிவாழியே
விழைந்தமெய் யன்பர் விடாய்தீர்த் தருள்சாந்த
வெண்ணிலாக் கொற்றக் குடைவாழியே. உ௩

அரனுரு வான வழற்பிழம் பாநன்
கவிர்திரு வண்ணு மலைவாழியே
வரனுறு யாறென மாதவ ராடும்
மலைவீ ழருவி பலவாழியே. உ௪

அகமா வதன்பொரு ளாராய்ச்சி யாற்பொய்
யகந்தை யறவவ் வகத்துண்மையா
நிகமா கமப்பொது நிச்சய மாநிகழ்
நிட்டானு பூதி நிலைவாழியே. உ௫

இமையாத நாட்டத் திறைவன்கண் ணோக்கா
லிதயத் தனுதி யிருளோடவே
இமையா தகத்து ரமணன் சொரூபத்
தெழிற்காட்சி கண்டினி தியாம்வாழியே. உ௬

ஒன்றுந் திறத்தா லுறுதிப் பொருளா
முடையோ னடியே னுயிர்வாழவே
என்றுந் தெளிவா வினிதிற் கொலுவீற்
றிருக்கு மிதயத் தலம்வாழியே. உ௭

மூல வவிச்சை முகந்த வகந்தைப்
படல முகிந்து வெளிவாங்கவே
வாலறி வாக வழங்கு சொரூப
மகத்துவ மோர்ந்த மனம்வாழியே. உ௮

சிவசிவ வென்று தியானித் திருக்குஞ்
சிவயோ கியர்செய் தவம்வாழியே
நவநவ மாக நறுந்தமிழ் மாலே
நவிலும்பா வாணர் நலம்வாழியே. உகூ

சிவத்துவ தெய்வத் திருவருள் சேரத்
தெளிந்து கிளர்ந்த செழுந்தீந்தமிழ்க்
கவித்துவ முற்றக் கழலுக் களித்துக்
களித்த வுளத்துக் கவிவாழியே. ௩0

குருபத்தி சான்ருக் குவிந்துளத் தொன்றுங்
குசாக்கிர புத்திக் குலாவுண்மைசேர்
பரபத்தி மாண்பாம் பரமோப சாந்த
பதத்தே மதர்த்துநிற் பார்வாழியே. ௩௧

நிலேபே றுடைய நிஜப்பொரு ளாம்பத
நின்மல ஞான நிலம்வாழியே
மலேபே ரினுமனம் பேரா வுரங்கெழு
மாதவச் செல்வர் குலம்வாழியே. ௩௨

அருத்தியின் மிக்கமெய் யன்பர் நினேத்த
வனேத்து மவர்க்குத் தருவித்தருள்
கருத்தன் பதத்தைக் கருத்திற் பதித்துக்
கலக்கந் தெளிந்த கணம்வாழியே. ௩௩

திருச்சிற்றம்பலம்

ஆகப் பதிகம் அ-க்குச் செய்யுள் ௩௭

—❋—

# அநுபந்தம்

## நூலகத்துச் சேர்க்க வேண்டியவை

[கீழ்க்கண்ட மூன்று பகுதிகளில், முதற் பகுதியைச் ‘சரணத்திரு வகவல்’-பக்கம் 5-‘திருவியற் சிறப்’பின் முதலிலும், இரண்டாம் பகுதியை ஷடி அகவல்-பக்கம் 24-‘சரணாகதி’யில் 636-637-அடிகளுக்கு இடையிலும், மூன்றும் பகுதியைச் ‘சரணத் திருவெண்பா’-57-58 வெண்பாக்களுக்கு இடையிலும்-சேர்க்கவும்]

I.

ஒன்றிரண் டாக வுருவெடுத் தொன்றொடொன்
றிமிண் டாடுவல் லாட்டா சரணம்
ஒத்த வுணர்ச்சியி னொன்றுபட் டன்பொடு
மெத்தென வாழும் விநோதா சரணம்
சத்தித் திறத்தொடு சார்ந்த வியைபுகொண்
டித்திறத் துன்னை யியம்புவ ரேனும்
விசித்திர சத்தி விலாசமல் லான்மற்
றிசைத்த வியல்பொன்று மின்றாஞ் சரணம்

II

நிவேத்திய மாக்கிய நெஞ்சினர்க் கன்றி
அவேத்திய மாநின் னருமைப் பதத்தை
உவாத்தியு நூலு முணர்த்துவ தெங்ஙன்
அவாச்சிய மாமெய் யடியா சரணம்

III

ஆவவென் றன்பா லடியேன்றன் வெம்பிறவித்
தாவமொரு மூன்றுந் தணியவே—தேவ
சிகாமணியா வோங்குந் திருப்பாத தெய்வச்
சரோவரநீ ராட்டாய் சரண்.

---

## பிழை திருத்தம்

பக்கம் 45 : செய்யுள்-௫ : வரி-1 :
‘மீட்சின்’ என்பதை ‘மீட்சியின்’—எனத் திருத்துக.

உ

சிவமயம்

ஸ்ரீ ரமண சரணப் பல்லாண்டு

# செய்யுள் முதற்குறிப் பகராதி


| செய்யுள் | | பக்கம் |
|---|---|---|
| அக்கிர | ... | 79 |
| அகந்தை | ... | 28 |
| அகமாவதன் | ... | 89 |
| அடியார்க் | ... | 34 |
| அடைக்கலங் | ... | 30 |
| அடையத் | ... | 31 |
| அண்ணலா | ... | 27 |
| அண்ணு | ... | 44 |
| அந்தரம் | ... | 86 |
| அந்தோ | ... | 39 |
| அயன்பத | ... | 80 |
| அரணுவது | ... | 44 |
| அரனுரு | ... | 89 |
| அரியபர | ... | 50 |
| அரியனெளி | ... | 82 |
| அருத்தித் | ... | 42 |
| அருத்தியின் | ... | 90 |
| அரும்பத | ... | 85 |
| அருள் | ... | 1 |
| அருளாலே | ... | 36 |
| அளித்திர | ... | 88 |
| அன்னிய | ... | 37 |
| அனந்தமாஞ் | ... | 31 |
| ஆதர | ... | 46 |
| ஆர்வலரை | ... | 31 |
| ஆலமணிந் | ... | 87 |
| ஆவவென் | ... | 91 |
| ஆற்றப் | ... | 38 |

| செய்யுள் | | பக்கம் |
|---|---|---|
| இகம்பர | ... | 38 |
| இடிவளர் | ... | 49 |
| இதாவொரு | ... | 45 |
| இமையாத | ... | 89 |
| இருண் | ... | 81 |
| இருவேறு | ... | 88 |
| இருள் | ... | 36 |
| இன்பே | ... | 35 |
| ஈவதன் | ... | 29 |
| உண்ண | ... | 32 |
| உண்ணு | ... | 81 |
| உதார | ... | 26 |
| உய்யா | ... | 28 |
| உயிருக் | ... | 38 |
| உரை | ... | 42 |
| உளோந்து | ... | 28 |
| உறுதி | ... | 37 |
| உன்னே | ... | 33 |
| உனக்கும் | ... | 37 |
| உனேத் | ... | 30 |
| ஊழி | ... | 86 |
| ஊன | ... | 79 |
| எடுத் | ... | 78 |
| எண்ணுதன | ... | 47 |
| எத்தனே | ... | 29 |
| எம்மா | ... | 76 |

| செய்யுள் | பக்கம் | செய்யுள் | பக்கம் |
|---|---|---|---|
| என்னு | ... 35 | சரணுகத் | ... 28 |
| என்னே | ... 31 | சரணுகதருக் | ... 87 |
| ஏதிலாய் | ... 76 | சாதனமா | ... 32 |
| ஏமாந்த | ... 39 | சாதனேமற் | ... 27 |
| ஏழுல | ... 86 | சால | ... 32 |
| ஏனே | ... 85 | சூவிடத் | ... 29 |
| ஏனே | ... 49 | சில்லேக் | ... 35 |
| ஐவர் | ... 41 | சிவசிவ | ... 90 |
| ஒன்றுந் | ... 89 | சிவத்துவ | ... 90 |
| கசிபத | ... 48 | சுகந்த | ... 32 |
| கடைய | ... 40 | சுகவாரிதி | ... 33 |
| கண்ணு | ... 45 | சுத்த | ... 37 |
| கதிக்கு | ... 38 | சுந்தர | ... 87 |
| கதியான | ... 40 | சுப | ... 43 |
| கரந்த | ... 82 | சுழற்றி | ... 41 |
| கருவே | ... 41 | சூழ்ந்த | ... 88 |
| கல்லாத | ... 35 | செவ்விய | ... 39 |
| கலங்குறு | ... 50 | சேம | ... 87 |
| கழுத்திற் | ... 42 | சேயான | ... 36 |
| கற்பனே | ... 81 | ஞான | ... 88 |
| கற்றதும் | ... 27 | தக்கவருக் | ... 34 |
| காலுக்கு | ... 78 | தஞ்ச | ... 38 |
| காளி | ... 87 | தருக்க | ... 85 |
| குஞ்சி | ... 33 | தழுதழு | ... 83 |
| குருபத்தி | ... 90 | தனய | ... 27 |
| குலவுந் | ... 45 | தாக்கிய | ... 75 |
| குளத்து | ... 34 | தாழிசை | ... 46 |
| குறிக்கொளா | ... 34 | திவலேயு | ... 42 |
| குறிப்பட்டு | ... 32 | திவியத்துக் | ... 83 |
| கொழுந்தழல் | ... 89 | தீன | ... 30 |
| சஞ்சலந் | ... 86 | துச்சத் | ... 40 |
| சரணத் | ... 25 | | |

| செய்யுள் | | பக்கம் |
|---|---|---|
| தெருவா | ... | 34 |
| தெருள் | ... | 33 |
| தேர்கலை | ... | 46 |
| தொண்டனை | ... | 75 |
| தொல்லைப் | ... | 43 |
| தொல்லையிருஞ் | ... | 80 |
| தொழுதார் | ... | 80 |
| நகவு | ... | 75 |
| நந்துணர் | ... | 26 |
| நம்பித் | ... | 32 |
| நலத்தா | ... | 43 |
| நறுமுறு | ... | 29 |
| நன்னலத்த | ... | 35 |
| நாசமில்லா | ... | 77 |
| நாயைப் | ... | 30 |
| நானுனக் | ... | 34 |
| நிகமாகமப் | ... | 82 |
| நியதிப் | ... | 39 |
| நிலை | ... | 90 |
| நினைந்த | ... | 86 |
| நீச்சி | ... | 43 |
| நீயெனக் | ... | 41 |
| பக்குவம் | ... | 40 |
| பண்ணுளாய் | ... | 43 |
| பணிவா | ... | 49 |
| பரம்பாய | ... | 27 |
| பல்லாண் | டகத்துண்மை | 60 |
| ,, | டகந்தைப்... | 52 |
| ,, | டகம்புரண | 63 |
| ,, | டகம்பொதி | 70 |
| ,, | டகில ... | 58 |
| ,, | டடியர் பசி | 66 |
| ,, | டடியர் பந்தம் | 52 |

| செய்யுள் | | பக்கம் |
|---|---|---|
| பல்லாண் | டடியவர் ... | 69 |
| ,, | டணுவுக் ... | 55 |
| ,, | டதிட்டானம் | 57 |
| ,, | டநாதி ... | 61 |
| ,, | டமுதாற்றும் | 53 |
| ,, | டரக்கற்கு | 67 |
| ,, | டலங்கலில் | 63 |
| ,, | டவையுற்பவ | 57 |
| ,, | டறிஞரால் | 57 |
| ,, | டறிவறிந் ... | 62 |
| ,, | டனந்த ... | 55 |
| ,, | டாதி ... | 51 |
| ,, | டிடம் ... | 66 |
| ,, | டிடர்க்குப் | 66 |
| ,, | டிதய ... | 61 |
| ,, | டிதென்ன... | 54 |
| ,, | டியம ... | 67 |
| ,, | டியாதொரு | 55 |
| ,, | டியாதொன் | 62 |
| ,, | டிரண்டற்ற | 55 |
| ,, | டிருடி ... | 52 |
| ,, | டிருந்தொளிர் | 60 |
| ,, | டிறைபணி... | 71 |
| பல்லாண்டு | கண்ணு | 52 |
| ,, | கண்ணெதிர் | 67 |
| ,, | கர்த்தத்து... | 66 |
| ,, | கற்பனுசக்தி | 56 |
| ,, | கற்பனுவேட | 60 |
| ,, | கன்மம் ... | 63 |
| ,, | கால ... | 55 |
| ,, | கீளொடு ... | 51 |
| ,, | சச்சித் ... | 61 |
| ,, | சண்டி ... | 65 |
| ,, | சாதகம் ... | 61 |

| செய்யுள் | பக்கம் |
|---|---|
| பல்லாண்டு சாந்தியே... | 64 |
| ,, சாலப் ... | 70 |
| ,, சித்தத்துட் | 68 |
| ,, சித்தர் ... | 69 |
| ,, சித்திர ... | 56 |
| ,, சிந்திப்பவர் | 68 |
| ,, சும்மாவிருந் | 72 |
| ,, சும்மாவிருப் | 71 |
| ,, சூழுந் ... | 72 |
| ,, செய்துஞ் ... | 68 |
| ,, சொல்லப் ... | 65 |
| ,, ஞத்துவ ... | 68 |
| ,, ஞானம் ... | 64 |
| பல்லாண் டுணர்வுக்கு... | 71 |
| ,, டுணர்வோ..கற் | 57 |
| ,, டுணர்வோ.மொ | 56 |
| பல்லாண்டு தந்தை ... | 56 |
| ,, தன்பதம் ... | 66 |
| ,, தன்மெய் ... | 54 |
| ,, தன்னருட்... | 67 |
| ,, தன்னிலே... | 54 |
| ,, தன்னுட் ... | 62 |
| ,, தன்னை யுபா | 68 |
| ,, தன்னையே | 60 |
| பல்லாண் டுதாசீன ... | 58 |
| பல்லாண்டு தான்றனக் | 58 |
| ,, தொம்பத | 64 |
| ,, நங்.. ரமணபக | 53 |
| ,, நங்..ரமணனை | 73 |
| ,, நாளும் ... | 65 |
| ,, நானுரெனும்ப | 63 |
| ,, நானுரெனுமவ் | 61 |
| ,, நிட்பிர ... | 68 |
| ,, பத்தர்ரா | 69 |
| பல்லாண்டு பத்தர் துன் | 72 |
| ,, பத்தர் பல | 73 |
| ,, பத்தராற்... | 69 |
| ,, பத்தரைத் | 65 |
| ,, பத்தினித்... | 70 |
| ,, டுபசிட ... | 53 |
| பல்லாண்டு பாண்டிச்... | 51 |
| ,, பாண்டிநாட் | 59 |
| ,, பார்ப்போன் | 62 |
| ,, புன்புலே ... | 71 |
| ,, பூதி ... | 51 |
| ,, பொன்போற் | 65 |
| ,, போலி ... | 59 |
| ,, மக்கள் ... | 60 |
| ,, மாணிக்க ... | 71 |
| ,, மாறு ... | 58 |
| ,, முற்றத் ... | 65 |
| ,, மோகப் ... | 52 |
| பல்லாண் டுலகுக் ... | 56 |
| ,, டுலோசனம் | 63 |
| பல்லாண்டு வஞ்சரை... | 67 |
| ,, வண்ணம்... | 59 |
| ,, வாணீ ... | 59 |
| ,, வாழ்வு ... | 67 |
| ,, வானினும் | 58 |
| ,, வில்வப் ... | 59 |
| ,, வீட்டு ... | 70 |
| ,, வீண்படா | 66 |
| ,, வேடம் ... | 60 |
| ,, வேதம் ... | 64 |
| பல்லாண் டுளத்துட் ... | 69 |
| ,, டுளேனுன் ... | 62 |
| ,, டுன்மத்தர் ... | 69 |
| பல்லாண்டு ஜீவபோக் | 63 |

| செய்யுள் | பக்கம் |
|---|---|
| பல்லாண்டு ஜீவபரக் ... | 64 |
| ,, ஜீவபோதங் | 52 |
| ,, ஜோதிப் ... | 59 |
| ,, ஸித்த ... | 62 |
| பல்லாண் டெங்கெங்கும் | 61 |
| ,, டெலாந்தன் | 64 |
| ,, டெழுத்துக் | 56 |
| ,, டென்மாமை | 70 |
| ,, டென்னெஞ்ச | 71 |
| ,, டெனைத்தன் | 70 |
| ,, டொருதலை | 58 |
| ,, டொருதான் | 57 |
| ,, டொருமைக் | 55 |
| பவனியிலே ... | 42 |
| பழியொடு ... | 48 |
| பழைய ... | 48 |
| பற்பல ... | 77 |
| பாவிற் ... | 44 |
| பிச்சனுத் ... | 43 |
| பிதிர்ச்சி ... | 31 |
| பிதிர்போல் ... | 36 |
| பிள்ளை ... | 37 |
| பிறை ... | 76 |
| புத்திக்கு ... | 88 |
| பெண்ணு ... | 47 |
| பெண்மணி ... | 39 |
| பெருந்தகை ... | 87 |
| பேசற் ... | 78 |
| பொங்கும் ... | 29 |
| பொருட்செல்வம் ... | 30 |
| பொருளின்வண்ணம் ... | 45 |
| மத்தம் ... | 88 |
| மந்தாகினி ... | 7 |

| செய்யுள் | பக்கம் |
|---|---|
| மரணமே ... | 42 |
| மலைமேல் ... | 26 |
| மறவியால் ... | 35 |
| மன்னுக ... | 84 |
| மன்னுழப் ... | 28 |
| மாண்டகு ... | 74 |
| மாண்பாக் ... | 27 |
| மாதவர் ... | 46 |
| மீட்சியின் ... | 45 |
| முத்தி ... | 33 |
| முந்தியர் ... | 40 |
| முயலை ... | 31 |
| முன்னணிக் ... | 86 |
| மூல ... | 89 |
| மெய் ... | 33 |
| மோக ... | 46 |
| மோழைமை ... | 47 |
| யவனி ... | 44 |
| யாமமுங் ... | 41 |
| யாரு ... | 79 |
| வணங்கு ... | 28 |
| வல்லாங்கு ... | 41 |
| வலி ... | 37 |
| வறந்தலை ... | 85 |
| வாலிய ... | 29 |
| வாழ்க ... | 83 |
| வான் ... | 30 |
| வானே ... | 36 |
| விதானங் ... | 46 |
| விமோசன ... | 26 |
| வெறும்போது ... | 39 |
| வேதமுடிக் ... | 74 |
| ஜாதியால் ... | 36 |